# விவேகவாணி

மார்ச் 2012 - கர மாசி - பங்குனி கலி 5113 ரூ.7/

## பகவான் இராமகிருஷ்ணர் அவதாரதினம்



# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**
**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி - 629 702**


## வணக்கம்! வாருங்கள்!!


**வெளியீட்டு அலுவலகம்**
**விவேகானந்த கேந்திரம், 5 - சிங்கராச்சாரி தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**


அன்புள்ள வாசக நேயர்களுக்கு,
நமஸ்காரம்.
**விவேகவாணியின் மார்ச் - 2012** இதழ் **ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோரின் திருவுருவப் படங்களைத் தாங்கி வருகிறது. குரு சிஷ்ய பரம்பரையைப் பற்றிய பட விளக்கங்கள் இவ்வாண்டு முழுவதும் **விவேகவாணியில்** வெளி வரும். **ஆதிசங்கரர் ஓம்காரம் பற்றிய மாண்டூக்கிய உபநிஷதத்தின் கௌடபாத காரிகைக்கு** அளித்த விளக்கம் தொடர்கிறது. **சுவாமி ராமதீர்த்தர்** புகழ்பெற்ற ஞானி ஆவார். ஓம்காரம் பற்றிய அவரது விளக்கம் விஞ்ஞானிகளும், தத்துவ ஆசிரியர்களும் ஓதுதற்குரியது.

கேந்திர நிறுவனர் **மா. ஏக்நாத்ஜியின்** வாழ்க்கை வரலாறு இவ்விதழில் நிறைவுறுகிறது. இத்தொடர் ஒரு நூலாகவும் வந்து நல்லமுறையில் விற்பனை ஆகிறது. கேந்திரத்தோடு தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் புனிதத் தொடர் ஆகும் இது.

**வள்ளியூரிலும், நாகர்கோவிலிலும் கேந்திரம்** நடத்திய பெரிய அளவிலான **கூட்டு சூரிய நமஸ்காரம்** பற்றிய செய்திகளும் வெளியாகின்றன. அன்பர்களுக்கு **தமிழ்ப் புத்தாண்டு** வாழ்த்துக்களும், பிரார்த்தனைகளும்! நல்லெண்ணங்கள் அனைத்தும் மனத்தில் வேரூன்ற இப்புத்தாண்டு நமக்கு உதவுமாக!

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**மார்ச் - 2012**


**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**



**தவம் 27 மார்ச் - 2012 சேவை - 11**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி சுவாமி விவேகானந்தர்

**அத்வய தத்வ ஸமாஹித சித்தம்**
**ப்ரோஜ்ஜ்வல பக்தி படாவ்ருத வ்ருத்தம்**
**கர்மகலே வரமத்புதசேஷ்டம்**
**யாமி குரும் சரணம் பவவைத்யம்**
**நரதேவதேவ ஜயஜய நரதேவ**

**-- சுவாமி விவேகானந்தர்**

நான் என் குருவிடம் சரண் அடைகிறேன். அவர் மனித தெய்வம் ஆவார். இப்பிறவிக் கடலின் நோயைத் தீர்க்கும் வைத்தியர் ஆவார். அவர் மனம் எப்போதும் அத்வைத சத்தியத்தில் நிலைத்து இருக்கிறது. அவர் உடல்மேல் பரமபக்தி என்னும் ஆடை சுற்றி இருக்கிறது. அவர் மனிதகுலத்தின் நன்மைக்காக எப்போதும் பணிபுரிந்து கொண்டே இருந்தார். அவருடைய செயல்கள் யாவும் மானுடத் தன்மைக்கு அப்பாற்பட்டவை. அவருடைய திருநாமத்திற்கு எப்போதும் வெற்றி உண்டாகட்டும்.

சுவாமி விவேகானந்தர் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணானந்தர்

**தம் தேசிகேந்த்ரம் பரமம் பவித்ரம்**
**விச்வஸ்ய பாலம் மதுரம் யதீந்த்ரம்**
**ஹிதாய ந்ருணாம் நரமூர்த்தி மந்தம்**
**விவேக ஆனந்த மஹம் நமாமி**

**-- ராமகிருஷ்ணானந்தர்**

சுவாமி விவேகானந்தர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் ஆவார். அவர் மிகத் தூயவர். உலகைக் காப்பவர், இனியவர், யோக ராஜர், மனிதகுலத்தின் நன்மைக்கென அவர் மானுட வடிவம் தாங்கி வந்தார். அந்த விவேகானந்தருக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன்.

**விவேகவாணியின் மார்ச் – 12** இதழில் **ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகிய குரு சிஷ்ய இணையை திருவுருவப்படமாக வெளியிடுகிறோம். **பிப்ரவரி – 18** ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதார தினம் ஆகும். ஸ்ரீராமகிருஷ்ணர் இறைவனின் அவதாரமாக மண்ணுலகில் வந்தவர் என்றால் அவர் இத்தனை ஆன்மீகச் சாதனைகள் செய்ய வேண்டிய தேவை என்ன? இதன்

பொருள் தெய்வீக நிலையில் அவர் தன்னைத் தானே மக்களுக்கு வழங்கிக் கொண்டார். அவருடைய சாதனையின் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் தன்னை மனிதகுலத்திற்கு அன்புப் பரிசாகக் கொடுத்து விட்டார். அப்படி லட்சியமே பாதை ஆயிற்று. அப்பாதையின் வழியே அதுவே இறங்கி வந்து நம்மை அடைந்தது. அப்பாதை வழியே ஏறிச் சென்றால் அந்த லட்சியத்தை நாம் அடையலாம். பகவானை அடையும் வழியை பகவானே காட்டவில்லை என்றால் நம் சிற்றறிவினால் அவரை அடைய நம்மால் ஒருபோதும் முடியாது. அவதாரம் என்பது பகவான் தன்னைத் தானே மனிதகுலத்திற்குப் பரிசாகக் கொடுப்பது தான்.

இப்படி பகவான் தன்னை மனிதகுலத்திற்கு வழங்கிய புனிதப் பணியில் சுவாமி விவேகானந்தர் ஒது முக்கியமான கருவியாக விளங்கினார். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் இருந்து கற்ற பாடங்களை சுவாமி விவேகானந்தர் மனிதகுலத்திற்கு வாரி வழங்கினார். இணையற்ற அன்பு, தேச பக்தி, மனித நேயம் உலக மதங்களை ஒற்றுமைப்படுத்துதல், விஞ்ஞானத்தையும், ஆன்மீகத்தையும் ஒருங்கிணைத்தல் இப்படி சுவாமி விவேகானந்தர் செயல்பட்ட ஒற்றுமைத் தளங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட சுவாமி விவேகானந்தரே ராமகிருஷ்ணரை தன் சக்திக்கெல்லாம் ஊற்றுக் கண் என்று குறிப்பிடுகிறார். நவபாரதத்தின் புத்தெழுச்சிக்கு விவேகானந்தர் காரணம் என்றால் விவேகானந்தரின் வருகைக்கு ராமகிருஷ்ணரே காரணம். இப்புனித குரு சீடர் இணையை **விவேகவாணியின்** அட்டைப்படத்தில் சித்தரிக்கிறோம்.

## கரவருடம் பங்குனி மாதம் ஹிந்துப் பண்டிகைகள்

### 2012 மார்ச் 14 முதல் ஏப்ரல் 12 வரை

**மார்ச் – 5** உலக உடலளவிலான மாற்றுத் திறனாளிகள் தினம் / உலக நுகர்வோர் தினம், **13** – புகை பிடிக்காதிருக்கும் வழக்கத்தைத் தூண்டும் நாள், **14** – காரடையார் நோன்பு, சாவித்ரி சத்யவான் விரதம், **18 –** பாபமோச்சனி ஏகாதசி, **21 –** உலக வனநாள். இரவு பகல் சமநீளமுள்ள நாள், இன வேறுபாடுகளைக் களையும் நாள், **22 –** உலக – நீர் – தினம், **23 –** பகத்சிங்/சுகதேவ்/ராஜகுரு தியாக தினம், உலக தட்பவெப்ப ஆய்வறிவு நாள், தெலுங்கு வருடப்பிறப்பு, வஸந்த நவராத்திரி ஆரம்பம், **24 –** உலக காசநோய் குணம், 25 – கணேஷ் சங்கர் வித்யார்த்தி தியாக தினம், **31 –** ஸ்ரீராம நவமி.

**ஏப்ரல் – 3** காமதா ஏகாதசி, உலக ஆட்டிசம் தினம், **4** – மயிலாப்பூர் அறுபத்துமூவர் உற்சவம், **5 –** பங்குனி உத்திரம் குலதெய்வ வழிபாட்டு தினம், **6 –** சத்ரபதி சிவாஜி நினைவு நாள், **7 –** உலக ஆரோக்கிய தினம், **13 –** தமிழ் வருடப் பிறப்பு, நந்தன ஆண்டுப் பிறப்பு, **13 –** ஜாலியான் வாலாபாக் படுகொலை நினைவு நாள், பஞ்சாப் கேரள, அஸ்ஸாம் தமிழ் வருடப் பிறப்பு.

## வேதத்தின் உட்பொருள்
# பிரணவம் எனும் ஓம்காரம் [252]
## மாண்டுக்ய உபநிஷதம்
## கௌடபாத காரிகையின் சங்கர பாஷ்யம்

**கௌடபாதரின் காரிகை:** இதைப்பற்றிய சுலோகங்கள்

**பஹிஷ் ப்ரஜ்ஞோ விபுர் விச்வோ ஹ்யந்த: ப்ரஜ்ஞஸ்து தைஜஸ:**
**கனப்பரஜ்ஞஸ்ததா ப்ராஜ்ஞ ஏகஏவ த்ரிதா ஸ்ம்ருத: 1) காரிகை (1)**

விச்வா புறப்பொருள்களை அனுபவிக்கின்றது. அது அனைத்திலும் ஊடுருவி இருப்பதாகும். தைஜஸா அகப்பொருள்களை அனுபவிக்கின்றது. அதுபோல ப்ராஜ்ஞா என்பது, பிரஜ்ஞை உணர்வின் திரட்சி ஆகும். அது ஒரு பொருள் - மூன்று விதங்களில் சிந்திக்கப்படுகின்றது. இந்த சுலோகத்தின் லட்சியப் பொருளாவது: ஆத்மா மூன்று அவத்தைகளையும் தாண்டி உள்ளது. அதன் ஒருமைப்பாடு, தூய்மை, எதனுடனும் தொடர்பு இன்மை, இவை ஒரு உண்மையால் நிரூபிக்கப்படுகின்றது. அவ்வுண்மை, அது ஒன்றுக்குப்பிறகு ஒன்றாக மூன்று அவத்தை நிலைகளிலும் இருப்பதும் அவை நான் என்ற நினைவின் மூலம் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்பதும் ஆகும். இது வேதபாடத்தின் பெரிய மீ ன் முதலிய உதாரணத்தால் கூறப்படுகின்றது.



ஒரு ஆற்றின் இரண்டு கரைகளுக்கும் மாறிமாறி பெரிய மீன் ஒன்று நீந்திச் செல்வது போல், இந்த அளவு கடந்த உயிர் கனவு, விழிப்பு நிலைகட்குச் செல்கின்றது. (பிருஹ iv iii 18) ஒரு பெரும் பருந்து, ஆகாயத்தில் பறக்கையில் களைப்படைந்து விடுகின்றது. அது தன் இறகுகளை விரிக்கின்றது. தன் கூட்டுக்குச் செல்கின்றது. அதுபோல அளவற்ற உயிரானது, இந்த நிலை அவத்தையை நோக்கி விரைகின்றது. அங்கே அது உறக்கம் அடைந்து, ஆசைகள் எதையும் படுவதில்லை. கனவுகள் எதையும் காண்பதில்லை. (பிரு. vi iii 19)

**தக்ஷிணாக்ஷிமுகே விச்வோ மனஸ்யந்தஸ்து தைஜஸ:
ஆகாசே ச ஹ்ருதி ப்ராஜ்ஞஸ்த்ரிதா தேஹே வ்யவஸ்தித (2)**

**காரிகை (2)**

விச்வம் வலது கண்ணில் பார்க்கப்படுகின்றது. அதுதான் அது அனுபவிக்கப்படும் இடம். ஆனால் தைஜஸன் மனத்தினுள் இருக்கின்றான். பிராஜ்ஞா இதயத்தினுள் இருக்கும் இடத்தில் இருக்கின்றான். அவன் மூன்று விதங்களில் உடலில் இருக்கின்றான்.

இந்த சுலோகம் விச்வம் முதலான மூன்றும், விழிப்பு நிலையிலேயே அனுபவிக்கப்படுவதெப்படி என்பதைக் கண்டுபிடிக்கும் நோக்கம் உடையது. விசுவன் என்பது தூலப் பொருள்களைக் காண்பது ஆகும் அது முக்கியமாக (தியானம் வல்லவர்களால்) வலது கண்ணில் உணரப்படுகின்றது. அதுவே அவனுடைய முகம் (அனுபவிக்கும் இடம்) ஆகும். இது வேத வசனத்துடன் ஒத்துப் போவதாகும். ''வலது கண்ணில் இருக்கும் இந்த புருஷன் 'இந்த' என்றழைக்கப்படுவான் (பிரு iv ii 2). யார் 'இந்த' ஆகவோ, 'வைச்வானரன்' ஆகவோ இருக்கின்றாரோ அவர் பேரொளி கொண்டவர். அவரே விராட் ஆத்மா ஆவார். விராட் ஆத்மா பிரபஞ்ச அளவிலான தூல உடம்புடன் ஐக்கியமானது. அதுவே சூரியனில் இருப்பது. தனி மனிதனின் ஆத்மாவில் இருக்கும் விச்வனும், (வலது கண்ணில் இருப்பவரும்) சூரியனில் இருப்பவரும் ஒருவரே.



**தடை:** ஹிரண்ய கர்ப்பன் வேறு; உடலை அறியும் ஆத்மா வேறு! (புலன்களை அறிந்து, வலது கண்ணில் கண்ணைக் கட்டுப்படுத்துபவராக, அறிபவராக, உடலின் எஜமானராக இருப்பவர்)

**விடை:** அவ்வாறில்லை; உண்மையில் வேறுபாடுகள் எதுவும் இருப்பதாக ஒப்புக் கொள்ள முடியாது. வேத வசனம் (ஒளி பொருந்திய ஒரே புருஷன் அனைத்து உயிர்களிலும் இருக்கின்றான். (சுவே. vi ii) என்கின்றது. ஸ்மிருதி வசனங்கள் ''பரத குலத்தவனே! எல்லா உடல்களிலும் இருந்து, உடலையும் புலன்களையும் அறிபவன் என்று என்னை அறிவாயாக (கீதை 13-2); பிளவுபடாததாயினும் எல்லா உயிர்களிலும் பிளவுபட்டதுபோல் இருப்பது (கீதை 13-16) (விராட் என்பது அடிப்படையில் ஹிரண்யகர்ப்பத்துடன் ஐக்கியமானது. அவ்விரண்டையும் அறிபவர் ஒருவரே)

விச்வன் எல்லா அங்கங்களிலும் சமமாக இருப்பவன் அவன் வலது கண்ணில் சிறப்பாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. வலது கண்ணில் தான் பார்வை மிகச்சிறப்பாக இருக்கின்றது. வலது கண்ணினை இருப்பிடமாகக் கொண்ட ஆத்மா ஒரு வடிவத்தைக் காண்கின்றது. பிறகு கண்களை மூடிக் கொண்டு அதே வடிவத்தை நினைவுபடுத்திக் கொள்கின்றது. அவ்வடிவம் கனவில் இருப்பதுபோல், மனத்தில் பதிவாகத் தோன்றுகின்றது. நனவில் இருப்பது போலவே கனவிலும் தோன்றுகின்றது. ஆகவே தைஜஸன் மனத்தில் இருந்தாலும், உண்மையில் அவன் விச்வனைப் போலவே இருக்கின்றான்.



**பிற்சேர்க்கை–1:** இவ்வாறு தான் விழிப்பு நிலையில் தைஜஸன் காணப்படுகின்றான். விச்வனும், தைஜஸனும் ஒன்றே. விச்வனாக எது காண்கின்றதோ, அதுவே, தைஜஸனாக நினைவு கூர்கின்றது.

நினைவு எனும் செயல் நின்று போனவுடன் பிராஜ்ஞன் (இதயாகாசத்தில் இருப்பவன்) காணப்படும் பொருள்கள், காண்பவர் என்ற பன்மையில் இருந்து விடுபடுகின்றான். அவன் தொடர்ந்து, பிரஜ்ஞை (உணர்வு)த் திரட்சியாக மட்டுமே இருக்கின்றான். ஏனெனில் அப்போது மனம் வேலை செய்வதில்லை.

**பிற்சேர்க்கை–2:** இவ்வாறு தான் விழிப்பு நிலையில் ப்ராஜ்ஞன் காணப்படுகின்றான். மனம் வேலை செய்வது நின்று போன பிறகு, அதே அங்கம், ப்ராஜ்ஞனின் குணங்களை ஏற்றுக் கொள்கின்றது.

கண்டறிவதும், நினைவு கூர்வதும் மனத்தின் அதிர்வுகள் மட்டுமே. இவை இல்லாதபோது, தோன்றா நிலையில் (அவ்யக்தத்தில்) ''இருப்பு'' மட்டுமே உள்ளது. அது தோன்றா நிலையில், இதயத்தில், பிராண சக்தியின் வடிவில் உள்ளது. இதைப்பற்றி வேதவசனம் ''இவை அனைத்தையும் சூழ்ந்திருப்பது, பிராண சக்தி தான்'' (சாந் iv iii 3) என்கின்றது. தைஜஸன் என்பவன் ஹிரண்யகர்ப்பனே. ஏனெனில் இரண்டும் மனத்தில் இருப்பவையே.

**பிற்சேர்க்கை–3:** தனி மனத்தினால் தைஜஸன் கட்டுப்படுத்தப்படுகின்றான். பிரபஞ்சமனம் ஹிரண்ய கர்ப்பனைக் கட்டுப்படுத்துகின்றது. தனிமனமும், பிரபஞ்ச மனமும் ஒன்றே. ஆகவே அவற்றால் கட்டுப்படுத்தப்பட்ட தைஜஸனும், ஹிரண்யகர்ப்பனும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்!

இதை வேதவசனம் ‘‘பற்றுக் கொண்டவனாகிய அவன் தன் பணியுடன், தன் சூக்கும உடல் அல்லது மனம் பற்றி இருக்கும் விளைவினையே அடைகின்றான். (பிரு IV iv 6) என்கின்றது.

**பிற்சேர்க்கை-4:** செயல்படும் சக்தியுடன் கூடிய ஹிரண்யகர்ப்பன் சூக்கும (லிங்க) சரீரத்தின் ஆன்மா ஆவார். சூக்கும சரீரம் (லிங்கம்) வேதபாடத்தில் மனமாகக் கூறப்பட்டிருக்கின்றது; ஆகவே தைஜஸனும் ஹிரண்யகர்ப்பனும் ஒன்றே.

(பிரு. IV iv 6) இந்தப் புருஷன் மனத்துடன் ஐக்கியமானவனாக, உள்ளான் (ஒளி பொருந்தியவனாக இதயத்தில் உணரப்படுகின்றான்)

**பிற்சேர்க்கை-5:** மனமாக அறியப்படுகின்ற புருஷனின் ஒரு சிறப்பான வெளிப்பாடு, தோற்றம் தான் ஹிரண்ய கர்ப்பன். தைஜஸனின் சிறப்பு வர்ணனை மனம் ஆகும்; ஆகவே அவை இரண்டும் ஒன்றே.

(பிரு. V vi) என்றெல்லாம் வேதவசனங்கள் கூறுகின்றன.

**தடை:** உறங்குபவனிடத்தில் பிராண சக்தியானது. வெளித்தெரியும்படித் தோன்றுவது உண்மையானது; (அங்கங்கள் அதனுள் சென்று இணைந்து மறைகின்றன.

**பிற்குறிப்பு-6:** உறங்குபவனின் அருகே உட்கார்ந்து இருப்பவர்கள், அவனிடத்தில் பிராணச் சக்தியின் செயல்பாடுகளைத் தெளிவாகப் பார்க்கின்றார்கள். உடலின் உறுப்புக்கள் உறக்கத்தில் பிராணனுடன் ஒன்றுபட்டு விடுகின்றன. இவ்வுண்மை, பிராணனே வெளித்தோன்றும் இயல்பினது என்பதை நிரூபிக்கும் இன்னொரு வாதம் ஆகும். அவ்யக்தம் (வெளித்தோன்றாதது) என்றால், காலம், தேசம், பொருள்கள் என்ற எல்லைகட்கு உட்படாதது என்று பொருள். ஆழ்ந்த உறக்கத்தில் பிராணன் இத்தன்மையது அல்ல!

இத்தகைய பிராண சக்தியை ‘‘வெளித் தோன்றாத’’ அவ்யக்தம் என்றதெப்படி?



**விடை:** இதில் குற்றம் ஒன்றும் இல்லை. பகுக்கப்படாத ஒன்று காலம் இடம் எனும் சிறப்பு அடையாளங்கள் இல்லாதது; தனிநபர் தன்னைப் பிராணசக்தியுடன் இணைத்து அறிவது தொடரும் வரை பிராண சக்தியானது பகுத்து இருப்பதாக அறியப் படுகின்றது. அவர் தன்னைப் பிராணசக்தியின் வெ வ் வே று பகுதிகளுடன் நெருங்கி இணைந்து இருப்பதாக அறிகின்றார்.

**பின்சேர்க்கை-7:** அவர்கள் இது என் பிராணன். இது அவன் பிராணன். இவ்விதமாக எண்ணக்கூடும். இருப்பினும் கூட ஆழ்ந்த உறக்கத்தில், பிராண சக்தியானது தானே, எந்த ஒரு சிறப்பு அம்சத்துடனும் (உடல் முதலிய நிர்ப்பந்தங்கட்கு உட்பட்டு) தன்னை ஐக்கியப்படுத்தி உணர்வதில்லை. ஆகவே பிராணசக்தி அச்சமயம் பகுப்புக்கு உள்ளாகவில்லை.

**பிற்சேர்க்கை-8:** பிறருக்கு அது, வெளிப்படையாகத் தோன்றினாலும், உறங்குபவனுக்கு, அது, வெளிப் படையானதல்ல. ஏனெனில் அவனைப் பொறுத்தவரை, பிராணன் என்பது, குறிப்பிட்ட காலம், இடம் இவற்றுடன் இணைந்ததல்ல. தனி நபருடன் இணைத்துப் பேசப்படும் பிராண சக்தியுடன் தன்னை இணைத்துக் காணும் மக்களிடத்தில், மரணத்திற்குப்பிறகு பிராணசக்தி வெளித்தோன்றுவதில்லை. அதுபோல, ஆழ்ந்த உறக்கத்தில் பாகுபாடுகள் தோன்றுவதில்லை. (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவர்கள், அவர்கள் தம்மைப் பிராண சக்தியுடன் ஐக்கியப்படுத்தி அறிகின்றனர்.

**பிற்குறிப்பு-9:** பிரஜ்ஞை என்பது, இரு வேறு இயற்கைகளைக் குறிப்பிட்டு வற்புறுத்துகின்றது. தெ ய் வீ க நிலையிலும், மானுட நிலையிலும் அவ்விரு இ ய ற் கை க ள் வெளிப்படாநிலையில் வரையறுக்கப்படுகின்றன. இது போன்றது தான் விளைவுகளை ஏற்படுத்துவதில், பிராண சக்திக்குள்ள சக்தியும் சாத்தியக்கூறும். தம்மை, எல்லைக்குட்பட்டவர்களாக (குறுகியவர்களாக)க் கருதும் தனிநபர்கள், அல்லது அந்த அவத்தைகளின் சாட்சிகள், அவ்யக்தத்துடன் தம்மை இணைத்துக் கொண்டதாகத் தோன்றும். முன்சொன்ன வருணனைகள் அவர் விஷயத்தில் பொருந்துகின்றன.

**பிற்சேர்க்கை -10:** உறங்குபவரும், அவ்யக்தம் எனும் தோன்றா நிலையும், வேறுபாடுகள் அற்றவை என்பதால் அவை ஒன்றே. அதுமட்டுமின்றி, எல்லைகட்கு உட்படுத்தும், வரையறுக்கும் நிபந்தனைகட்கு உட்படும்போதும் அவை ஒன்றே. அவரிடத்தில் எல்லாம் பாகுபாடற்ற நிலையில் உள்ளன. அவர் பிரஜ்ஞையின் கனதிட வடிவம் என்பவை அந்த வருணனைகள் (ஆழ்ந்த உறக்கத்தில் பிரஜ்ஞை தன்னைப் பிராணனுடன் ஐக்கியப்படுத்தி உணர்கின்றது.

**பிற்சேர்க்கை-11:** தெய்வீக, மானுடத் தளங்களில் வெளிப்படும் இயல்புகளின் ஒற்றுமை, ஒருமைப்பாடு.

**தடை:** தோன்றா நிலையான அவ்யக்தத்தை, பிராணன் என்று அழைப்பதேன்?

**விடை:** வேதவசனம் அழகியவனே! தனி ஆத்மா, மனத்தால் கட்டுப்படுத்தப்பட்டது பிராணனுடன் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. பிராணனைத் தன் லட்சியமாகக் கொண்டது. (சாந்தோ VI viii 2)

**தடை:** வேத வாக்கியத்தில் பிராணன் எனும் சொல் பிரம்மன் என்று பொருள்படுகின்றது. அது முதலில் இருப்பது, உள்ளது என்று அறிமுகப்படுத்தப்பட்டது. அழகியவனே! துவக்கத்தில் அனைத்தும் ‘‘இருப்பாக’’ ‘‘உள்ளதாக’’ மட்டுமே இருந்தது. (சாந் VI ii 1)

**விடை :** இந்தத் தடை பொருத்தமானது அல்ல! அங்கே ‘இருப்பது’ என்பது, உள்ளுறைப் பொருளாகக் கருதி ஏற்கப்பட்டது. அந்த வாக்கியத்தில் ‘‘இருப்பது – பிரம்மம்’’ பிராணன் என்று அழைக்கப்பட்டாலும், அது தனி உயிர்களின் தோற்றுவாயாக இருக்கும் என்பது, மறுத்துரைக்கப்படவில்லை. விதையற்ற (காரணமாகாத) நிலையில், இங்கு பிரம்மம் குறிப்பிடப்பட்டிருந்தால், வேத வாக்கியம் ‘‘இதுவல்ல, இதுவல்ல’’ (பிருஹ IV iv 22, IV v 15) என்று கூறியிருக்குமே! எதிலிருந்து வாக்கு திரும்பி விடுகின்றதோ (தைத் II 9) என்று கூறியிருக்குமே ‘‘அறியப்பட்டதில் இருந்து நிச்சயம் பிரம்மம் வேறானது, அறியப்படாததற்கும் அது மேம்பட்டது’’ (கேன I 4) என்று கூறியிருக்குமே! ஸ்மிருதியிலும் அது இருப்பும் அல்ல, இல்லாததும் அல்ல, என்று கூறப்பட்டுள்ளது (கீதை XIII - 12) இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, விதையற்ற பீஜமற்ற காரணமற்ற நிலையிலான பிரம்மம் என்றால், அதில் சென்று ஒடுங்கும் தனிநபரின் ஜீவாத்மாக்கள், ஆழ்ந்த உறக்கத்திலும், பிரளயத்திலும் அதில் ஒடுங்கும் ஜீவர்கள் திரும்பி எழுவது என்பது பொருந்தாது;

**பிற்சேர்க்கை–12:** உறக்கம், பிரளயம் இவற்றுக்குப்பின் யாராவது, மீண்டு வர முடியும் என்றால் . . . . சுத்தப் பிரம்மனுடன் ஐக்கியம் தவிர வேறல்ல என்று அவை கருதப்படும்போது! முக்த ஆத்மாக்கள் (விடுபட்ட ஆத்மாக்கள்) திரும்ப மறுபிறப்பு எடுக்கும் சாத்தியமும் உண்டாகிவிடுமே! ஏனெனில் இவ்விரண்டிலும் காரணம் இன்றி இருப்பதே பொதுத்தன்மை ஆகும். மேலும், பிரபஞ்ச சம்ஸார நிலையின் விதை எதுவும் இன்றி இருக்கும்போது, அந்த விதை பிரம்ம ஞானத்தால் எரிக்கப்பட்டுவிடும்போது, ஞானம் என்பதே பயனற்றதாகிவிடும். ஆகவே ‘இருப்பது’ என்பது, சாந்த உபநிஷதத்தில் பிராணன் என்றழைக்கப்படுகிறது. எல்லா உபநிஷதங்களிலும் **அதுவே காரணம்** என்றழைக்கப்படுகின்றது. தற்காலிகமாக அதுவே பிறவற்றின் விதையாக (பீஜமாக) கருதிக் கொள்ளப்படுகின்றது. அதனால்தான் வேத வசனங்களில் அது, அதன் காரண நிலையைத் தவிர்த்துப் பேசப்படுகின்றது. முண்டக உபநிஷதம் மேலான அவ்யக்தத்திற்கும் மேலானது (முண்டக II i 2) என்கின்றது. தைத்திரீயம் ‘‘எதிலிருந்து வாக்கு, திரும்பி விடுகின்றதோ என்கின்றது (தை II 9) பிரு உபநிஷதம் ‘‘இதுவல்ல, இதுவல்ல’’ (பிரு IV iv 22) என்கிறது. பரமசத்தியமான நிலை, காரணத்தில் இருந்து விடுபட்டது, சரீரம் முதலியவற்றில் இருந்து விடுபட்டது. விழிப்பு முதலிய அவத்தைகளில் இருந்து விடுபட்டது, பிராஜ்ஞை என்பதில் இருந்து விடுபட்டது, தனியாகப் பேசப்படும்; அதன் துரீயம் என்ற பக்கம் எடுத்துக் கூறப்படும். காரண அவத்தையும், சரீரத்தால் அனுபவிக்கப்படுவதே. விழித்துக் கொண்ட மனிதன் ‘‘நான் ஆழ்ந்த உறக்கத்தில் ஒன்றையும் அறியவில்லை’’ என்று நினைவு கூர்வதைப் பார்க்கிறோமே! அதனால்தான் ‘‘த்ரிதோ தேஹே வ்யவஸ்தித: ‘‘உடம்பில் மூவிதங்களில் இருப்பது’’ என்று கூறப்பட்டுள்ளது.

# புனித மந்திரம் ஆகிய ஓம் பற்றி சுவாமி ராமதீர்த்தர் கூறியது

சுவாமி ராமதீர்த்தர் கூறினார். நீங்கள் தான் தீபம். நீங்கள் தான் விட்டில் பூச்சி. உங்களுடைய மிகத்தீவிரப் பகைவர் நீங்களேதான். வேறு யாருமில்லை 'ஓம்' என்று ஓதும்போது, உங்கள் மனத்தைத் தீவிர கதிக்குக் கொண்டு சென்று மனத்தில் இருந்து பொறாமை, தீய எண்ணம் அனைத்தும் வேருடன் பிடுங்கி எறியப்படவேண்டும்.

இந்தப் புனிதச் சொல் பற்றி ஸம்ஸ்க்ருதத்தில் பலப்பலப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இன்னும் இன்னும் எழுதப்படுகின்றன. ஓம் என்ற இந்த அசையில் எல்லா வேதங்களும் அடங்கும். வேதாந்தம் அனைத்தும் அடங்கும் ஹிந்துக்களின் புனித நூல்கள் அனைத்தும் அடங்கும்.

## ஆமென், ஆமீன், ஓம்

பாரத நாட்டில் பல, பல்வேறு சமயக் குழுக்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாப் பிரிவுகளும் ஓம்காரத்திற்கு இதயப்பூர்வமான மரியாதை அஞ்சலி செலுத்துகின்றன. ஹீப்ரூக்கள், முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பிரார்த்தனைகளை ஆமேன் என்று முடிக்கிறார்கள். முகம்மதியர்களும் அவ்வாறுதான் செய்கின்றனர். அவர்கள் ஆமென் என்பதை ஆமீன் என்று உச்சரிக்கின்றனர்.

உங்கள் சாதாரணப் பிரார்த்தனையில் ஆமேன் என்பது என்ன பங்கு வகிக்கிறது? எங்கே பேச்சு அனைத்தும் நின்று போய்விடுகிறதோ, உரையாடல் அனைத்தும் நிறைவடைகிறதோ, அங்கு ஆமேன் வருகின்றது. அங்கேதான் ஆத்மா பரம்பொருளில் கரைகின்றது. இதயமொழியை வெளியே பொழிகிறீர்கள். கடைசியில் பரம்பொருளில் முழு உயிரும் கரைந்து விடும் தருணம் வருகிறது. வாக்கினால் கூறமுடியாத, வெளிப்படுத்த முடியாத, சொல்லுக்கடங்காத நிலையை ஒருவர் எட்டும்போது அங்கே ஆமேன் இருக்கிறது. அப்படியானால் ஆமேன் என்பதென்ன? அதுவே ஓம் வேறெதுவும் இல்லை. உங்கள் புனிதப் பிரார்த்தனைகள் எல்லாவற்றிலும் ஆமேன், ஆமீன் என்பது வகிக்கும் இடம் வேதாந்தம் அல்லது பேச்சின் முடிவு என்ற சொல்லின் பொருளை மிகச்சரியாகக் கூறிவிடுகிறது. அது மிகவும் அருகில் வந்து, வேதாந்தத்தின் சாரமாகிய ஓம் என்பதைக் குறித்து விடுகிறது.

வேதாந்தம் என்ற சொல்லின் அகராதிப் பொருள் அறிவின் முடிவு; பேச்சின் இறுதி, அங்கே பேச்சு எல்லாம் எண்ணங்கள் எல்லாம் நின்று போய்விடுகின்றன. ஹிந்துக்கட்கு வேதாந்தம் முழுவதுமே 'ஓம்' என்பதால் குறிப்பிடப்பட்டு விடுகின்றது.

வேதங்களில் எந்தப் பொருளில் இச்சொல் வழங்கப்படுகிறதோ அதை இப்போது பார்ப்போம். ஓம் அ–உ–ம்.

**சுவாமி ராமதீர்த்தர்**



தாந்திரீகர்கள் ‘ஓம்’ என்பதைத் தங்கள் பரிபாஷையில் விளக்குகின்றனர். வைஷ்ணவர்கட்கு என்று தனி விளக்கம் உண்டு. ஹிந்து சமயக் குழுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி விளக்கங்கள் தரும், இங்கே தரப்படும் விளக்கம் அனைத்தையும் உள்ளடக்கியது. அது வேதாந்தத்தில் தலைமை ஊற்றுக் கண்ணாகத் தரப்படவேண்டும்.

**முக்கியத்துவம்:** ஓம் என்பதில் அ–உ–ம் என்பவை அடங்கும். வேதாந்த போதனையின்படி ‘அ’ எனும் ஓசை பருப்பொருளினால் ஆன, இப் படைப்புலகத்தைக் குறிக்கும். கண்ணுக்குத் திடப்பொருளாகக் காட்சி அளிப்பது அது! தூலப்புலனுலகம் அது. உங்கள் விழிப்பு நிலையில் காணப்படுவது. கனவு உலகின் அநுபவங்கள் யாவும் –உ– என்ற எழுத்தோசையால் குறிக்கப்படும். காண்பவர், காணப்படும் பொருள்கள், தன்மை, படர்க்கை, பொருள்கள் கனவு நிலையில் உள்ளவை அனைத்தும் –உ– எனும் ஓசையால் குறிப்பிடப்படுகின்றன. மனோதத்துவ, விண்ணுலகத் தளம், ஆவிகளின் உலகம், சொர்க்கம், நரகம் அனைத்தும் –உ– என்பதால் குறிக்கப்படும். –ம்– என்பது, ஆழ்ந்த கனவற்ற உறக்கத்தில் அறியப்படாமல் இருப்பவை, விழிப்பு நிலையிலும் கூட அறியப்படாமல் இருப்பவை, அறிவின் புரிந்து கொள்ளும் சக்திக்கு அப்பாற்பட்ட அனைத்தையும் குறிக்கும்!

இவ்விதம் ஓம், அ, உ,ம என்பது மனிதனின் மூவித அனுபவங்களைக் குறிக்கிறது. இந்தப்புற, தூல உலகம் அனைத்தையும் குறிக்கிறது. அ–உ–ம என்பதில் பொதுத் தத்துவமான –அமாத்ரா– என்பது உள்ளது. அது, அழியாத அமரதத்துவத்தைக் குறிக்கும். அது மாறாதது. ஆன்ம வடிவினது. உள்ளது உள்ளபடியேயானது அது. அது இந்த மூவித புறஉலகின் ஊடே பரவி நிற்பது. இந்த அமாத்ராவும் முழுவதுமாகக் கவனிக்கப்படவேண்டும். ஓம் அனைத்தையும் குறித்து நிற்பது என்பதே போதும்.

ஐரோப்பா, அமெரிக்கத் தத்துவ ஞானம் எல்லாம் விழிப்புநிலை அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டது. அவை, கனவு, கனவற்ற உறக்கம் எனும் அவத்தைகளின் அனுபவங்களைக் கணக்கிலேயே கொள்வதில்லை. அல்லது சிறிதளவே கருதுகின்றன. ஹிந்து கூறுகிறார். உங்கள் ஆரம்பமே, குறைவான, நிறைவற்ற தகவல்களின் அடிப்படையிலானது. பிரபஞ்ச அளவிலான பிரச்சினைகட்கு நீங்கள் காணும் தீர்வுகள் எப்படிச் சரியாக இருக்க முடியும்?

**(தொடரும்)**

# நசிகேதமன்றம்

மு. வைகுண்டவேல், எட்டுகூட்டுத் தேரிவிளை

***1778) நமது இந்து சமயத்தில் இரு முக்கிய பிரிவுகள் என்று சைவ சித்தாந்தம், வேதாந்தம் இவை சொல்லப்படுகின்றன. இவைகள் இரண்டுக்கும் உள்ள சில முக்கிய வேறுபாடுகளைச் சுருக்கமாக வெளியிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்?***

பாரத நாட்டில் சைவம் மூன்று விதங்களாக வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தமும், கர்நாடகத்தில் வீர சைவமும், காஷ்மீரத்தில் சிவ அத்வைதமும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் வழங்கும் சிவ வழிபாடு, சைவ சித்தாந்தம் எனற தத்துவ அடிப்படையில் வழங்குகிறது. இதில் சிவன் நற்குணங்களின் உருவம் ஆவார். எல்லாச் சக்திகளின் இருப்பிடம் ஆவார். அவரை தேவாரங்களின் அடிப்டையில் சைவ சித்தாந்தம் என்ற நெறியின் மூலம் வழிபடவேண்டும். திருக்கோவில் வழிபாடு பக்தருக்குச் சேவை இவை முக்கியமானவை. நன்னூல் ஓதுதல், பூஜை செய்வது இவையும் முக்கியமானது. சிவபெருமானை சிவலிங்க வடிவிலும், இருபத்தைந்து திருமேனிகள் வடிவிலும் வழிபடலாம்.

வேதாந்தமும் வேதங்களை, உபநிஷதங்களை அடிப்படையாகக் கொண்டது. இதில் இறுதிப் பரம்பொருளானது பரம்பிரம்மம் எனப்படும். இதை நிர்க்குணம் என்று குறிப்பிட்டாலும் குணங்கள் அற்றது என்பதை விட குணங்களைப் பற்றிய அகம்பாவம் இல்லாத நிலை, நற்குணங்கள் நன்கு செரித்துப் போன இயல்பு நிலை என்பதே பொருத்தமானது. ஆனால் வேண்டும் என்றே சண்டையைத் தூண்டுவதற்காக சிலர் வேறுபாடுகளை மிகைப்படுத்திப் பேசுவார்கள். அது நமக்கு வேண்டாம். பாரதப் பண்பாடு இஷ்ட தெய்வத்தை வழிபடும் அதேநேரத்தில் அனைத்துக்கும் அப்பாற்பட்ட அதீத நிலையான டிரான்சென்டெண்டல் நிலையை தங்கள் தங்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டின் மூலம் அடைய முடியும் என்கின்றது. இதனால் வேதாந்திகள் பரம்பொருள் வழிபாட்டை இரு நிலையில் வைத்து பேசுவார். அவை பேச்சு வழக்கில் சகுணம் என்றும் நிர்க்குணம் என்றும் சொல்லப்படும். ஆனால் அத்வைதம் அனைவருக்கும் பொது. உதாரணமாக வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும், கர்நாடக சங்கீத மேதை முத்துசாமி தீக்ஷிதரும் முருகனை இஷ்ட தெய்வமாகக் கொண்ட அத்வைதிகள். ஞானேஸ்வரர் கணபதியை இஷ்ட தெய்வமாகக் கொண்ட



அத்வைதி. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பராசக்தியை இஷ்ட தெய்வமாகக் கொண்ட அத்வைதி. அப்பய்யதீக்ஷிதர் சிவனை இஷ்ட தெய்வமாகக் கொண்ட அத்வைதி. துளஸிதாசர் விஷ்ணுவை இஷ்ட தெய்வமாகக் கொண்ட அத்வைதி. அவுந்த் மன்னர் சூரியனை இஷ்ட தெய்வமாகக் கொண்ட அத்வைதி. இது வேதாந்தத்தின் சிறப்புத் தன்மை ஆகும். சிவனை இஷ்ட தெய்வமாகக் கொண்ட வேதாந்திகள் பலப்பலர்.


எஸ். சித்ரா, ராஜபாளையம்

### 1779) பரோபகாரம் என்ற நல்ல செய்தியைப் பரப்புவார்கள் என்பதில் பரோபகாரம் என்ற சொல் எதைக் குறிக்கும்?

இது சுவாமி விவேகானந்தரின் கருத்து ஆகும். பிறருக்கு உதவி என்று பொருள். இறைவனை நமக்குள் இருப்பவராகவும், அனைத்தையும் கடந்தவராகவும் வழிபடுவதால் அவருக்கு கடவுள் என்ற சிறப்புப் பெயர் உண்டு. அவருடைய இரண்டு தன்மைகளையும் போற்றும் வண்ணம் நமக்குள் இருக்கும் நற்குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறர்பால் அன்புகாட்டித் தொண்டுபுரிய வேண்டும். இதுவே விவேகானந்தர் கண்ட வாழ்க்கை நெறி.

எஸ். ஆர். சுமி

### 1780) சண்டேஸ்வரரை வணங்கும் போது ஏன் கைதட்டி வணங்க வேண்டும் என்று கூறுகின்றனர்?



சண்டேஸ்வரர் சிவபக்தர்களுள் மிக உயர்ந்தவர் ஆவார். அவர் சிவனை வழிபடும் உரிமையை விரும்பி, தன் குடும்பத்தினருடனும் பகைத்துக் கொண்டார். சிவபெருமான் சண்டேஸ்வரரைத் தன் மகனாகவே கருதித்தன் திருவடியை அவர் தலைமேல் பதித்தார். பிள்ளையாரையும், முருகனையும் போல உற்சவங்களில் சண்டேஸ்வரருக்கும் தேர்விழா எடுப்பது உண்டு. முழுமையான கோவில்களில் சுவாமி, அம்மன், பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர் ஆகிய ஐவருக்கும் புறப்பாடும், ஊர்வலமும், தேரும் உண்டு. சிவன் கோவிலில் வலது பிராகாரத்தில் சிவனை நோக்கி சண்டேஸ்வரர் தியானத்தில் அமர்ந்திருப்பார். அவருக்கும் சிவபெருமானுக்கும் இடையில் யாரும் போகாத வண்ணம் சுவர் எழுப்பி இருப்பதும் உண்டு. சிவன் கோவிலுக்கு வந்து செல்பவர்கள் தங்கள் வருகையை பதிவு செய்ய சண்டேஸ்வரரை, கைதட்டி, தியானத்தில் இருந்து எழுப்பி, அவரிடம் பிரார்த்தனை செய்வார்கள்.

சந்தியா, சேலம்

***1781) இறைவனை வழிபடும்போது அவரது சிறப்பினைக் கூறி வழிபட வேண்டுமா? அல்லது நமது குறைகளை தீர்க்குமாறு மட்டும் கூறி வழிபடுகின்றனரே ஏன்? நமது குறையை கூறி வழிபடுவது சரியா? தவறா?***

ஒரு பழம் பாடல் வழிபாட்டு நெறியைப் பின்வருமாறு வருணிக்கிறது.

**நமஸ்காரஸ்ததா சீர்ஷ/ சித்தாந்தோக்தி பராக்ரமா/**
**விபூதிம் ப்ரார்த்தனாஞ் சைவ/ ஷட்விதம் ஸ்தோத்ர லட்சணம்//**

1) இறைவனை விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். 2) அவருடைய வெற்றியை வாழ்க, ஜெய, போற்றி என்று வாழ்த்த வேண்டும். 3) இறை தத்துவத்தை, சித்தாந்தத்தைக் கற்று ஓதவேண்டும். 4) இறைவனின் வீர, தீரக் கதைகளைக் கூறவேண்டும். 5) அவருடைய நற்குணங்களை எடுத்துச் சொல்லவேண்டும். 6) அவரிடம் நம் பிரார்த்தனைகளைச் சொல்ல வேண்டும்.

வேத வேள்விகளில் நம் வழிபாட்டால் மனம் இரங்கி இறைவன் வரும்போது அவரிடம் என்னகேட்க வேண்டும் என்பதை ருத்ரகத்தின் சமகம் என்ற பகுதி அழகாக எடுத்துச் சொல்கிறது. உலக நன்மையில் நம் நன்மையும் கலந்திருப்பதை உணர்ந்து எல்லோருக்கும் நல்லதை வேண்டும் பிரார்த்தனை சமகம் ஆகும்.

கே. சத்யா, குற்றாலம், நெல்லை மாவட்டம்

***1782) ஆன்மீகச் சிந்தனையில் எப்போதும் கடவுளை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமா?***

ஆன்மா என்ற சொல்லுக்குத் தான் என்று பொருள். தன்னுடைய முழுமையான இயல்பே பரம்பொருள் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். தனக்கு அப்பாற்பட்டவராக பரம்பொருளைக் கருதினால் அன்பு வராது. தன் உடம்பை தானாக நினைத்துக் கொள்பவரின் வளர்ச்சி நின்று விடும். தன்னையும், முழுமையையும் இணைக்கும் சிந்தனையே ஆன்மீகச் சிந்தனை எனப்படும்.

பி. இந்துமதி, கோவில்பட்டி

***1783) விவேகானந்தர் அவர்கள் நூறு துணிச்சல் திறமையான இளைஞர்களைக் கொடுங்கள். நான் உலகையே மாற்றிக் காட்டுகிறேன் என்றார். ஆனால் ஒரு இளைஞராக இருந்து ஏதாவது கருத்து தெரிவிப்பதிலேயோ, முடிவெடுப்பதிலேயோ இளைஞர்களை செயல்படவிடாமல் தடுக்கிறார்கள். காரணம் எங்களுக்கு அனுபவம் போதாதாம். அப்படி உங்கள் கருத்து என்ன?***

சுவாமி விவேகானந்தர் கண்ட லட்சிய இளைஞர்களிடம் முடிவு எடுக்கும் துணிச்சலோடு கூட சரியான முடிவு எடுக்கும் விவேகமும் இருக்கும். அது இல்லாத போது உணர்ச்சிவசப்பட்டு தவறான முடிவுகளை எடுக்கும் ஆபத்து உண்டு. இளைஞர்கள் பொதுவாக மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்கள். அவர்களுடைய உணர்ச்சி வேகத்தில் அவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நம்புகிறார்கள். அவர்களுக்கு சில விஷயங்கள் தெரியாது என்று அறிவுறுத்துவது கடினம். அத்தகைய இளைஞர்கள் பெரியவர்களின் கருத்தைக் கேட்க மாட்டார்கள். ஒரு முதல்வர், கல்லூரி நடத்தினார். அதில் முதல் வருட மாணவனுக்கு எல்லாம் தெரிந்தவர்கள், இரண்டாம் வருட மாணவர்களுக்கு கொஞ்சம் சந்தேகப்பட்டு கேள்விப்பட்டு தெரிந்து கொண்டவர்கள் என்று பெயர். மூன்றாம் வகுப்பு மாணவர்கட்கு ஒன்றும் தெரியாதவர்கள் என்று பெயர். பலருக்கு வாழ்க்கையில் தங்கள் அறிவின் குறைபாடுகள் பற்றித் தெரிவதில்லை. ஆனால் விவேகமும், செயல் வேகமும் கொண்ட இளைஞர்கள் கருத்தை உலகம் நிச்சயம் மதிக்கும்.

ராமகிருஷ்ண ராஜா, ராஜபாளையம்

### *1784) சொர்கம், நரகம் உண்மையா?*

நாம் விழித்திருக்கும் போதும் உறங்கிக் கனவு காணும் போதும் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். உண்மை என்று உணர்கிறோம். அதுபோல இந்தத் தூல உடலை விட்ட பிறகு சூக்கும உலகில் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். அவற்றையே சொர்க்கம் என்றும் நரகம் என்றும் கூறி வருகிறோம். உலகில் எல்லா மதங்களும் இதை ஏற்றுக் கொள்ளுகின்றன. பல மதங்கள் நிரந்தர நரகம் என்ற கருத்தைச் சொல்லுகின்றன. ஹிந்து மதம் சொர்க்க, நரகத்தை தற்காலிக உலகம் என்றும் அவற்றுக்கு அப்பாற்பட்டதாக பிறவா, இறவா நிலையை மனிதன் பெற முடியும் என்று கூறுகின்றது. அந்நிலைக்கு மோக்ஷம் என்று பெயர்.

நகர்ப்புற மாணவர்கள் முகாமில் ஒரு தந்தை கேட்ட கேள்வி

### *1785) செய்யும் தொழிலே தெய்வம் என்று சொல்லுகிறோம். தொழில் விஷயமாக ஆசிரியராக சில நேரங்களில் சென்று விடுவதால் நாம் அன்று சாமிகும்பிட முடிவதில்லை. இது மனதுக்கு வருத்தம் அளிக்கிறது. இது சரியா தவறா?*

துவக்கக் காலத்தில் நாம் செய்யும் செயல்கள் பிரார்த்தனையாக மாறுவதற்கு கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும். ஆகவே நாம் செய்யும் செயலை இறை பணியாகக் கருதுவதற்கு படிப்படியாக பழக வேண்டும். அதுவரை முறையான வழிபாடு கட்டாயம் தேவை. நீண்ட பூஜையோ பிரார்த்தனையோ செய்ய முடியாவிட்டாலும் பயணத்தின்போது ஓரளவுக்காவது நாம ஜபமும் பிரார்த்தனையும் கட்டாயம் செய்ய வேண்டும். நாம் செய்யும் தொழிலே தெய்வம் என்று மனப்பூர்வமாக உணருவதற்குக் காலம் பிடிக்கும். அதற்குள் அவசரப்பட்டு இறை வழிபாட்டை விட்டு விடக்கூடாது.

மதுரை வெல்க வெல்கவே முகாமினர்

### 1786) ஆன்மீகத்தில் ஈடுபடாமல் நாட்டிற்குச் சேவை செய்ய முடியாதா?



பாரத நாட்டின் இயல்பை முழுமையாகப் புரிந்து கொண்டு சேவை செய்ய ஆன்மீகம் உதவிபுரியும். நிறைந்த பாதுகாப்பையும், முழுமையான அறிவையும் நமக்குத் தரவும் ஆன்மீகம் உதவும். ஆன்மீக உணர்வற்ற சேவை அகம்பாவம் ஆகிவிடும் ஆபத்து உண்டு.

மதுரை வெல்க வெல்கவே முகாமினர்

### 1787) ரமண மஹரிஷியின் முக்கியத்துவம் என்ன?



வேதாந்தத்தின் முக்கிய சிந்தனை ‘‘நான்’’ என்பதன் முழுமையான பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. மனிதன் வளர்ந்து முழுமை அடைய தன்னைப் பற்றிய ஆய்வு உதவும். இம்முறையில் நம் நாட்டின் எல்லா தியான நெறிகளும் **தான் என்பது என்ன?** என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்றன. இதை மிகவும் தெளிவாக நவீன காலத்தில் கூறியவர் ரமண மஹரிஷி. மனிதகுலத்தை ஒன்றிணைத்தல், உலக சமயங்களை ஒன்றிணைத்தல் விஞ்ஞான யுகத்தில் வேதாந்தம் முதலிய பல துறைகளில் ரமண மஹரிஷி காட்டிய வழி மனிதகுலத்திற்கே பெரும் பயன் தரும்.

**இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப் லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்) சென்னை–600 049**

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

**ஏக்நாத்ஜி கூறியது**

## *1791) மக்களைக் கவர்ந்திழுத்தல் - மேலை நாட்டவர் வழியும் நம் வழியும்*

அமெரிக்க எழுத்தாளர், டேல்கார்னகி ‘‘மனிதர்களைக் கவர்ந்து சினேகம் கொள்வது எப்படி’’ என்ற புத்தகம் வெளியிட்டுள்ளார். அவர் பல கோணங்களிலிருந்து இந்த விஷயத்தை ஆராய்ந்து மக்களோடு எவ்வாறு பேசுவது என்று துவங்கி உன்னிடம் பரிவு காட்டாதவர்களையும் எப்படிக் கவருவது என்பது பற்றியும் அவருடைய கட்டுரைகளில் விவரித்துள்ளார். ஆனால் அவர் கூறியுள்ள கருத்துக்கள் அமெரிக்க மக்கள் போன்ற கட்டுக்கோப்பாகவும், முழுவதும் இயந்திரமயமாக இயங்கி வரும் சமூகத்தினருக்கே பொருந்தும். இந்திய நாட்டில் வாழும் நமக்கு அவை சிறிதும் பயன்படாது. அதுவும் நம்மைப் போன்ற சமூக ஊழியர்கள் மக்களை நம் உழைப்பின் மூலம் இயக்கத்தின்பால் வரச் செய்ய வேண்டுமே ஒழிய, அவர்களுக்கு (திடீர்) மனமாற்றம் ஏற்படுத்த முயலக்கூடாது. அது சூழ்நிலையைக் கெடுத்துவிடும்.


**ஸ்தாபனத்தின் மூலதனம் பிறரது பலம், பலவீனமல்ல:** டேல்கார்னகி கூறுகிறார். ‘‘ஒரு மனிதனைச் சந்தித்தால், அவனை அபாரமாகப் புகழ்ந்து அதன்மூலம் ஒரு சாதகப் போக்கை உருவாக்கி, உன் மனதில் இருக்கும் நோக்கத்தை தெரிவித்து உன் சாகசப் பேச்சுகளின் மூலம் அவனை உன் பிடியில் சிக்க வைக்க வேண்டும்.’’ ஆனால் இது எதைக் குறிக்கிறது தெரியுமா? நாம் மனித அபிலாஷைகளைத் தூண்டி, அவனுடைய பலகீனத்தைத் தவறான வழியில் செல்ல உபயோகிக்கிறோம். யாவருமே புகழ்ச்சியை விரும்புவர். அதனால் நம் காரியம் நிறைவேற, இந்தச் சாதனத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறோம். பொதுவில் எல்லோருக்கும் சில பலவீனங்கள் உண்டு. அதோடு சிலருக்கு குறிப்பிட்ட பலவீனங்கள் இருக்கலாம். நாம் அந்த பலவீனத்தைப் பயன்படுத்தி அவனை வளைக்க முற்படுகிறோம். இது தவறான செய்கை. நம் கொள்கைக்கு அவனைக் கொண்டுவர அவனுடைய மன பலவீனத்தை பயன்படுத்தலாகாது. அவனை நம் அமைப்பின் பால் இழுக்க நம் அன்பையும் பரிவையும் காட்டி செயல்படவேண்டுமே ஒழிய அவனுடைய மன அபிலாஷைகளைத் தூண்டிவிடுவது மனிதத்தனமேயல்ல. ‘‘ஒழுக்கமே சாலச்சிறந்தது,’’ ‘‘ஒழுக்கமே வெல்லும்’’ ‘‘ஒழுக்கத்தை ஒழுகி காரியம்

முடியாவிட்டால், ஒழுக்கமின்மையை கடைப்பிடித்தாலும் தவறு இல்லை. நீ வேறு ஒரு வழியில் சென்று அவனைக் கவரவும்'' இது போன்றதும் வேறு பல உத்திகளையும் கார்னகி அவருடைய புத்தகத்தில் விவரிக்கிறார். இந்த உத்திகள் யதார்த்த நடைமுறைக்கு ஒவ்வாது. நம் நிலைமையும் மாறுபட்டது. கடினமானதும்கூட, நமக்கு மக்களை எப்படியாவது கவர்ந்து நம் ஸ்தாபனத்தில் சேர்த்திடவேண்டும் என்ற விருப்பம் கிடையாது. மனிதனை அவனுடைய பலவீனத்தை மூலதனமாகக் கொண்டு கவர்ந்தால், பலவீனமே அவனை வென்று அடிமையாக்கி விடும். அவன் நம் ஸ்தாபனத்திற்கு எந்த வழியிலும் பயன்படவும் மாட்டான். நாம் பலவீனங்களை ஊக்குவிக்க மாட்டோம் என்பது மட்டுமின்றி பலவீனங்களை எங்கு காண்கிலும் அவைகள் அறவே நீக்கிட முயல்வோம்.

**வினோபாஜி கூறியது**

## 1792) சுக்ல கிருஷ்ண கதிகள்

ஆகாயத்தின் கிருபை என்பதற்கு உள்ளமென்ற வானத்தில் ஆசை என்ற மோகமே படரக்கூடாது என்பது பொருள். ஒருசமயம் காந்தியடிகள், ''நான் ராட்டை ராட்டை என்று கத்திக் கொண்டிருக்கிறேன்; ராட்டையை மிகவும் புனிதமானதென்று நம்புகிறேன். ஆனால் இறுதிக் காலத்தில், இவ்வாசையும், இவ்வாசனையும் இருக்கக்கூடாது. ராட்டையைப்பற்றி எண்ணும் அறிவை எனக்கு அளித்தவனுக்கு ராட்டையைக் கவனித்துக் கொள்ளப் பூரணத்திறமையுண்டு. ராட்டையை இப்பொழுது நல்ல நல்ல பெரியோர் பலர் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.



ராட்டையைப் பற்றிக் கவலை கொள்வதை விட்டு நான் இனி ஆண்டவனிடம் போய்ச் சேருவதற்கு ஆவன செய்யவேண்டும்'' என்று சொன்னார். அதாவது, உத்தராயணம் என்பதற்கு உள்ளத்தில் பற்று, ஆசை என்ற மேகம் படராமை என்பது பொருள்.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**

## 1793) உற்சாகத்தின் மகிமை

ஒரு இராணுவ ஜெனரல் விமானத்தில் இருந்து குதிக்கும் வீரர்களின் அணியைப் பார்வையிட போயிருந்தார். இராணுவ அணி வகுப்பை ஏற்றுக் கொண்டதும் அவர் வீரர்களிடம் கேட்டார். ஆகாய விமானத்தில் மிக உயரமான இடத்தில் இருந்து கீழே குதிப்பது உனக்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்டார். முதல்

வீரன் அதை நான் மிகுந்த விருப்பத்துடன் செய்கிறேன் ஐயா என்று சொன்னான். இரண்டாம் வீரன் ஐயா அது ஒரு கனவு போன்ற இனிய அனுபவம். என்னால் விமானத்தில் இருந்து குதிக்கும் பயிற்சியைச் செய்யாமல் இருக்கவே முடியாது என்றான். மூன்றாவது வீரனிடம் ஜெனரல் அதே கேள்வியை கேட்டார். அவன் சொன்னான். ஐயா எனக்கு மிகுந்த பயம் ஏற்படுகிறது. ஒவ்வொரு தடவை குதிக்கும் போதும் நான் செத்து செத்துப் பிழைக்கிறேன். எனக்கு அது பிடிக்கவே இல்லை.

ஜெனரல் கேட்டார். அப்படியானால் நீ ஏன் விமானத்தில் இருந்து குதிக்கும் வேலையை விடாமல் செய்கிறாய்? மூன்றாவது வீரன் பதில் சொன்னான். விமானத்தில் இருந்து குதிப்பதை இன்ப அனுபவமாக அனுபவிக்கும் இந்த நண்பர்களுடன் கூட இருப்பதையே நான் விரும்புகிறேன்.

**நீதி:** உற்சாகம் என்பது ஒரு நெருப்பைப் போன்றது. உடன் இருப்பவர்களையும் அது பற்றிக் கொள்கிறது.

**(ஈஸ்ட் & வெஸ்ட் சீரிசில் இருந்து)**

## *1794) எந்தப் பணியையும் இன்னும் நன்றாக செய்யலாம்*

சிறுவன் சின்னச்சாமிக்குக் கண்கள் தெரியாது. பிச்சை எடுக்க உட்காரும் இடத்தில் ''எனக்குக் கண் தெரியாது. உதவுங்கள்'' என்று ஒரு அட்டையில் எழுதி வைத்திருப்பான். ஓரிரு காசுகள் அவன் துணி விரிப்பில் கிடக்கும். படைப்பாளர் பண்பரசர் அந்த வழியே போய்க் கொண்டிருந்தார். சில காசுகளை எடுத்து துணி விரிப்பில் போட்டார். அந்த அட்டையை எடுத்து பின்புறத்தில் சில வார்த்தைகளை எழுதினார். புதிய வார்த்தைகளை மட்டும் அவ்வழியே செல்பவர்கள் பார்க்கும்படி வைத்துவிட்டு போனார். துணி விரிப்பில் கி டு கி டு வெ ன சி ல் ல ரை சேர ஆரம்பித்தது. வ ழ க் க த் தை வி ட அதிகமாக சின்னச்சாமிக்கு மக்கள் சில்லரை போட்டனர். அன்று மாலை பண்பரசர் அவ்வழியே திரும்பி வந்தார். அவர் காலடி சத்தத்தை



சின்னச்சாமி அடையாளம் கண்டு கொண்டான். ஐயா என் அறிவிப்பு அட்டையில் எழுதியதை மாற்றியது நீங்கள் தானே? அப்படி என்ன எழுதினீர்கள் எனக்



கேட்டான். நிறைய பணம் சேர்ந்து விட்டதே. பண்பரசர் பதில் சொன்னார். நான் உண்மையை எழுதினேன். நீ சொன்னதை எழுதினேன். ஆனால் அதையே வேறுவிதமாக எழுதினேன். ''இன்றைய தினம் அழகான தினம். அதைப்பார்க்க என்னால் முடிய வில்லையே.'' இதுதான் நான் எழுதியது. சின்னச்சாமி எழுதியதும் பண்பரசர் எழுதியதும் ஒன்றே தான். ஆனால் ஒரே உண்மையை பண்பரசர் எவ்வளவு அழகாகக் கூறிவிட்டார்!

## *1795) கனவுக் கணக்கு*

ஒரு சீடனுக்கு நிறையச் சம்பளத்தில் பெரிய வேலை கிடைத்தது. தன் குருவிடம் ஓடி வந்து குருவே எனக்கு பாராட்டுச் சொல்லுங்கள். நிறைய சம்பளத்தில் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் நிறைய உள்ள வேலை கிடைத்து இருக்கிறது. குருநாதர் சொன்னார். நேற்றைக்கும் நீ தூக்கத்தில் நடப்பவன் தான். இன்றைக்கும் நீ தூக்கத்தில் நடப்பவன். நாளைக்கும் நீ தூக்கத்தில் நடப்பவன். இதில் பெரிய முன்னேற்றம் என்ன வைத்து வாழுகிறது! நீ சாகிற வரை உறக்கத்தில் நடப்பவன் தான்.

சீடன் சொன்னான். குருவே நான் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிப் பேசினேன். ஆன்மீக முன்னேற்றத்தைப் பற்றி பேசவில்லை.

குருநாதர் சொன்னார். அப்படியா செய்தி. உறக்கத்தில் நடப்பவனுக்கு வங்கிக் கணக்கும் உள்ளதா? அதை அனுபவிக்க எப்போது நீ விழித்து எழப் போகிறாய்.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**


## *1796) கையழகு, மெய்யழகு*

சிறுவன் சீராளன் தன் பெற்றோருடன் வீட்டில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தான். தன் தாயைப் பார்த்து அம்மா உலகத்திலேயே அன்பு மிகுந்த அழகான முகம் உன்னுடையது தான். எனக்கு அதை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்போல் தோன்றுகிறது.

அச்சமயம் சீராளனின் பார்வை தாயின் கைகளின் மேல் விழுந்தது. அவை உருவிழந்து வளைந்து தழும்புகளுடன் உருக்குலைந்து காணப்பட்டன.

சீராளன் சொன்னான். அம்மா. உலகத்திலேயே அழகற்ற கைகள் உங்களுடையது தான். அவற்றைப் பார்க்கவே எனக்கு சகிக்க வில்லை.

அவன் தந்தை தயாளன் மகனை தன் மடியில் உட்கார்த்தி வைத்துக் கொண்டான். மகனே உனக்கு ஒரு கதை சொல்கிறேன். ஒரு நாளைக்கு ஒரு சின்னக் குழந்தை தன் தொட்டிலில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அப்போது அந்தத் தொட்டிலில் நெருப்புப் பிடித்துக் கொண்டது.



சீராளன் கேட்டான்.

குழந்தைக்கு என்ன ஆயிற்று? தந்தை தயாளன் தொடர்ந்தான். குழந்தையை பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரி பயந்து ஓடிவிட்டாள். குழந்தையின் தாய் நெருப்பைப் பார்த்து ஓடி வந்து குழந்தையைக் காப்பாற்ற முயன்றாள். தன் கையால் நெருப்பை அடித்து அணைத்தாள். குழந்தையைக் காப்பாற்றினாள். இந்த முயற்சியில் அத்தாயின் கைகள் வெந்து தழும்பேறின. பல மாதங்கள் கழிந்துதான் புண்கள் ஆறின. ஆனால் அவளுடைய கைகள் தழும்பேறி உருக்குலைந்து முடங்கிப் போயின.

**சீராளன்:** எவ்வளவு தைரியசாலி அந்தத் தாய்!

தயாளன் கேட்டாள். அந்தத் தாய் யார் தெரியுமா? உன்னுடைய அம்மா தான். அவளுடைய தழும்பேறிய உருக்குலைந்த முடங்கிப் போன விரல்கள் தான் உன் உயிரைக் காப்பாற்றின.

சீராளன் திரும்பி கண்களில் கண்ணீர் பொங்க தாயைப் பார்த்தான். அவள் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டான். திரும்பத்திரும்ப அவற்றை வணங்கினான். ''அம்மா உலகத்திலேயே அழகான கைகள் இவை தான் என்றான்'' தாயின் அன்பைக் காட்டிலும் உயர்ந்த பொருள் உலகில் எதுவும் இல்லை.

**ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது**

## *1797) கடைசி ஆசை*

அலெக்ஸாண்டர் மனிதகுலம் அவர் காலத்தில் அறிந்திருந்த நாடுகளையெல்லாம் வென்றார். வடமேற்கு பாரதம் வந்து விட்டு, தன் நாடு திரும்பும் நிலையில் இருந்தார். சோதிடர்களைக் கூப்பிட்டு நான் எப்போது மரணம் அடைவேன் என்று கேட்டார்.

அவரது ஆயுட்காலம் குறைவாகவே இருந்ததாக சோதிடர்களுக்குத் தெரிய வந்தது. ஆனால் அவர்கள் மன்னனிடம் அதைச் சொல்லத் துணியவில்லை. அவர்கள் மறைமுகமாகக் கூறினார்கள். மாமன்னா! இம்மண் முழுவதும் இரும்பாகி, வானம் முழுவதும் தங்கமாகும் வரையில் நீங்கள் உயிருடன் இருப்பீர்கள்.

அலெக்ஸாண்டர் தனக்குத் தானே பேசிக் கொண்டார். இத்தகைய அற்புதங்கள் எப்போதாவது தான் நடக்கும். ஒருக்கால் எனக்கு மரணமே இல்லையோ என்னவோ?

ஆனால் பாரசீக நாட்டை அவர் சென்றடைந்தபோது அவருக்குத் தீவிரமான குளிர்காய்ச்சல் கண்டது. அவர் தன் முதலமைச்சரிடம் சொன்னார். என் பலம் எல்லாம் போய் விட்டது. என்னால் இனி குதிரை சவாரி செய்ய முடியவில்லை. இப்பாலைவனத்தின் வெப்பம் என்னைக் கொல்கிறது.


அலெக்ஸாண்டர்

முதலமைச்சர் கவலையுடன் சொன்னார். மன்னவா சில கல் தூரம் சென்றால் ஏதாவது மரநிழல் கிடைக்கும். அங்கே நீங்கள் படுத்து ஓய்வு எடுக்கலாம். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும் அலெக்ஸாண்டரால் உட்காரவே முடியவில்லை. குதிரையில் இருந்து கீழே இறங்கி சுடுமணல் தரையில் அவர் படுத்து விட்டார். அவருக்கு மூச்சு வாங்கிற்று. முதலமைச்சர் தன்னுடைய இரும்புச் சங்கிலியாலான மார்புக் கவசத்தை கழற்றினார். அதன்மீது நாற்பது தடவை பட்டுத்துணி போர்த்தப்பட்டிருந்தது. அதை விரித்து முதலமைச்சர் அலெக்ஸாண்டரை அதன்மீது படுக்கச் செய்தார். தன்னுடைய கேடயத்தை மன்னனின் முகத்தின் மீது வெயில் விழாமல் பிடித்தார். அக்கேடயத்தில் தங்கத்தகடுகள் பதிக்கப்பட்டிருந்தன. காய்ச்சலால் களைப்புற்று புரண்டு கொண்டிருந்த மன்னன் பார்வையில் சங்கிலிக் கவசமும், தங்கக் கேடயமும் கண்களில் பட்டன. அவர் முனகினார். ஆஹா சோதிடர் சொன்னது உண்மை ஆயிற்று. நான் படுத்திருக்கும் படுக்கை இரும்பால் ஆனது. என்மேல் கவிழ்ந்து இருக்கும் ஆகாசம் தங்கத்தால் ஆனது என்று பெருமூச்சு விட்டார். அரச வைத்தியர்கள் அலெக்ஸாண்டரை சோதித்துப் பார்த்தார்கள். மன்னவா உங்களை ஏமாற்றி பயனில்லை. நீங்கள் மரணத்தின் வாசலில் கிடக்கிறீர்கள்.

**மன்னன்:** மருந்து எதுவும் பலிக்காதா?

**வைத்தியர்கள்:** இல்லை ஐயா! உங்களுக்கு எந்த மருந்தும் இப்போது பயன்படாது. அலெக்ஸாண்டர் முதலமைச்சரிடம் சொன்னார். ஒவ்வொரு அறிவிப்பு கொடுங்கள். என்னுடைய ஆய்வுக் காலத்தை நீட்டி நான் ஊருக்குப் போய் என்னுடைய தாயின் முகத்தைப் பார்க்கும் வரை நான் உயிரோடு இருக்கச் செய்யுங்கள். அப்படிச் செய்யும் வைத்தியருக்கு என் நாட்டில் பாதியைக் கொடுப்பேன். வைத்தியர்கள் சொன்னார்கள். முடியாது மன்னா நீங்கள் ஓரிரு நிமிடங்களில் இறந்துவிடப் போகிறீர்கள். அலெக்ஸாண்டரை பெரும் பயம் பிடித்துக் கொண்டது. உன்னை உயிரோடு கொண்டு போய் என்தாயிடம் விடுபவருக்கு என் சொத்து எல்லாவற்றையும் கொடுத்து விடுவேன். நான் பிச்சை எடுத்து உண்பேன்.

கம்பீரமான குரலில் வைத்தியர்கள் சொன்னார்கள். மன்னவா ஒரு மூச்சு கூட உங்களுக்கு பாக்கி இல்லை. உங்கள் மரணத்தை யாரும் தடுக்க முடியாது. உலகத்திற்கே பயமூட்டிய அலெக்ஸாண்டர் இதைக்கேட்டு ஒரு குழந்தைபை போலத் தேம்பித் தேம்பி அழுதார்.

**நீதி:** நாம் ஒவ்வொரு நாளும் 23 ஆயிரம் தடவை மூச்சு விடுகிறோம். இந்த விலை மதிப்பற்ற மூச்சை பயனற்ற தேடல்களில் வீண் செய்கிறோம். மனிதப் பிறவியின் அருமையை உணர்ந்து கடவுளை அறிய முயற்சி செய்யவேண்டும்.

**பின்னுரை:** அலெக்ஸாண்டர் தன் மரணத்திற்குப் பிறகு தன் சவப் பெட்டிக்கு வெளியில் தன் இரண்டு கைகளும் தெரியும்படி தன்னைப் புதைக்கச் சொன்னாராம். உலகத்தையே வெற்றி கொண்டாலும் அலெக்ஸாண்டரால் மரணம் அடையும் போது தன்னுடன் எதையும் எடுத்துச் செல்ல முடியவில்லை என்று அவர் உலகுக்கு அறிவிக்கச் சொன்னார்.

## *1798) பாரதத் தத்துவ ஞானியின் பெருமை*

1939-ம் ஆண்டு இத்தாலி நாட்டின் ரோம் நகரில் அனைத்துல விஞ்ஞான மாநாடு நடந்தது. மாநாடு நடந்த ஹோட்டலில் பாரதத்தின் புகழ்பெற்ற தத்துவப் பேராசிரியராகிய சுரேந்திரநாத் தாஸ் குப்தா தங்கியிருந்தார். மாநாட்டுத் தலைவர் பேராசிரியரை இரவு உணவுக்கு அழைத்தார். பேராசிரியர் விஞ்ஞான உலகில் பாரத நாட்டின் அறிவுத் திறனைப் பற்றி மாநாட்டுத் தலைவரிடம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். அவருடைய அறிவுத்திறனைக் கண்டு வியந்த மாநாட்டுத் தலைவர் மறுநாள் மாநாடு துவங்கும் போது பேராசிரியர் தாஸ் குப்தா பண்டைய பாரதத்தில் விஞ்ஞான நெறிமுறை என்பது பற்றி சில நிமிடங்கள் பேச அழைத்தார்.

பேராசிரியரிடம் புத்தகங்களோ, குறிப்புக்களோ இல்லை. அவருடைய நினைவாற்றல் அற்புதமாக இருந்தது. உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மறுநாள் அவையில் கூடினர். பேராசிரியர் தான்முதல் பேச்சாளர். 15 நிமிடத்திற்குள் பேச்சை முடித்துக் கொள்ளும்படி அவரிடம் கூறப்பட்டது. பேராசிரியர் சுரேந்திரநாத் தாஸ் குப்தா பாரத நாடு பண்டைய விஞ்ஞான நெறி பற்றி பேசினார். பதினைந்து நிமிடம் ஒருமணி ஆயிற்று. இரண்டு மணி ஆயிற்று. மூன்று மணி ஆயிற்று. யாரும் அவர் பேச்சில் குறுக்கிடவே இல்லை. உலக விஞ்ஞான மாநாட்டின் முதல்நாள் காலை அமர்வு முழுவதும் இதற்கெனவே செலவிடப்பட்டது. நவீனக் கருவிகள் இன்றியே பாரத நாட்டவரின் மூளை எப்படி விஞ்ஞானக் கருத்துக்களை உருவாக்கியது, என்பதை உலக விஞ்ஞானிகள் மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் கேட்டார்கள். ஓரிரு இங்கிலாந்து விஞ்ஞானிகள் கேள்விகள் கேட்டார்கள். பதில் கிட்டிற்று. அமர்வு முடியும் போது கைத்தட்டல் பேரொலி மண்டபத்தையே அதிர வைத்தது. ‘‘மாமனிதர், மாமனிதர்’’ என்று விஞ்ஞானிகள் அவரை பாராட்டினர்.

# வளங்களைச் சேமித்துப் பாதுகாப்பது எப்படி?
## தொழில் நுணுக்கம்; வழிமுறை

ஜூல்ஸ் என். ப்ரெட்டி

**12) பயனை மேம்படுத்த வெளியில் இருந்து குறுக்கிடுவோர் சந்திக்கும் சவால்கள்:** 1) சுயசார்புள்ள குழுக்களை அமைக்க, உயிருள்ள வழிமுறைகளைப் பயன்படுத்துக, கட்டாயப்படுத்தாதீர்கள். வேகத்தை அதிகரிக்க அவசரப்படாதீர்கள். 2) உழவர் நிறுவனங்கள் சுயசார்பு பெற வேண்டுமானால் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும்.

அ) சுயநிதி கொண்டு நிதி ஆதாரம் திரட்ட வேண்டும். ஆ) சுயாட்சி அமைப்பு உருவாக வேண்டும். இ) உழவர்களிடையே அந்த நிறுவனம் அங்கீகாரம் பெறவேண்டும். ஈ) திட்டமிடுதல், நிர்வாகம், சேவைபுரிதல் இவற்றில் சுயசார்பினை அந்த நிறுவனம் பெற வேண்டும்.

3) குறுக்கிட்டுப் பணிசெய்யும் வெளிநபர்கள்/அமைப்புக்கள் கவனிக்க வேண்டியவை.

அ) கிரியா ஊக்கிகள், அமைப்பாளர்கள், உயிரூட்டிகள், ஹிந்து சக்திகளாகப் பணிபுரிதல் வேண்டும். ஆ) முறைசாராக் குழுக்களாகப் பணியைத் துவங்க வேண்டும். இ) முறையான கட்டமைப்புக்களைப் பிறகு உருவாக்கிக் கொள்ளலாம். ஈ) பொதுக் கருத்து மூலம், தலைவர்களை மக்கள் ஏற்கத்தக்க விதத்தில் உருவாக்க வேண்டும். உ) சிறிய உட்குழு உருவாக்க வேண்டும். ஊ) பிரச்சினைகளைத் தீர்க்க, எதற்கு முன்னுரிமை, சுயமதிப்பீடு, செயல்திறன், தவறுகளில் இருந்து பாடம் கற்றல்.

**13) உள்ளூர்க் குழுக்கள் என்ன செய்யலாம்?** ஒரே ஒரு கிராம சமுதாயத்திற்குப் புத்துயிர் ஊட்டிவிட்டால் அது கடந்த 50 ஆண்டுகளில் அரசாங்கமும், பல்கலைக்கழகங்களும் செய்த அனைத்துப் பணிகளையும் விட, அதிக நம்பகத் தன்மை கொண்டதாக இருக்கும் பிறருக்கு அதிகம் தைரியமூட்டுவதாக இருக்கும். பண்ணைச் சமுதாயங்கட்குப் புத்துயிர் ஊட்டுவது, நம் தேசத்திற்கே புத்துயிர் ஊட்டுவதின் முதற்படியாகும், படிப்படியாக நகர்ப்புறச் சமுதாயமும் புத்துயிர் பெறும். இது அதிகாரப்பூர்வமாக, நம்புவதற்குரியதாக, உண்மையில் அனைவருக்கும் ஊக்கமளிப்பதாக, உண்மையில் முதல் முயற்சியாக இருக்க வேண்டுமானால் இதனை, அச்சமுதாயமே வெற்றிகரமாகச் சாதித்து முடிக்க வேண்டும். வெண்டல் பெர்ரி 1997

**உள்ளூர் அளவில் கூட்டு முயற்சி**: 1) தனிநபரின் முயற்சி அறைகுறைப் பாதுகாப்பையே அளிக்கும்.

**2) உள்ளூர் கூட்டு நிர்வாக அமைப்புக்களின் முக்கியத்துவம்:** வளங்களை நிர்வாகம் செய்தல், தொழிலாளர்களைப் பங்கு போட்டுக் கொள்ளுதல் – உழைப்புப் பங்கீடு, பரிமாற்றம், சந்தை விற்பனை, ஆகியவற்றைக் கூட்டாகத்தான் செய்தாக வேண்டும். தனிநபர் செய்ய இயலாது. உள்ளூர்க் குழுக்கள் முறைசாராமல் பெயரளவுக்கே குழுக்களாக இருக்கும். கிராமத் தலைமை, நீர் நிர்வாகக் குழு, நீர்பயனாளிகள் குழு, அக்கம்பக்கத்தார் குழு, இளைஞர் மன்றம், மகளிர் மன்றம், வீட்டு வசதி குழுக்கள், சோதனை விவசாயிகள், அன்னையர் சங்கம், மாடு மேய்ப்போர், மரம் வளர்ப்போர் உழைப்பைப் பரிமாறிக் கொள்வோர் இப்படி. இங்கெல்லாம் மக்களை ஒன்றுசேர்க்கும் சக்தியாக இருப்பது, பரஸ்பர அறிமுகம், நட்பு இவையே. இவற்றைப் புறக்கணித்தால் பெரு நஷ்டம் விளையும். அரசினால் செயற்கையாக உண்டுபண்ணப்பட்ட அமைப்புக்கள் பயன்தரா. உதாரணமாக, ஒரு கிராம வனக்காப்புக் குழு ம.பி.யில் பல மரங்களைக் காப்பாற்றியது. ஆடு மாடு மேயும் நிலப்பரப்பை, வரையறை செய்தது. மரம் வெட்டுவதை நிறுத்தியது. வெள்ளை ஆடுகளை விற்றுவிடச் சொல்ல உள்ளூர் மக்களை இணங்க வைத்தது. விறகு விற்பனையை நிறுத்தியது.

**14) வளங்குன்றா வளர்ச்சியில் முன்னேற்றத்தினை அளக்கும் அளவுகோல்கள்:** 1) பொருளாதார லாபம், 2) முன்னேற்றத்திற்கான சாத்தியக் கூறுகள், 3) புறச்சூழலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம், 4) பசுமைப்புரட்சி நடந்த நிலத்தில் விளைச்சல் குறையாமல் இருத்தல்/அதிகரித்தல், புறச்சூழல் நன்மைகள் மேம்படுதல், 5) சிக்கலான, பல்விதமான நிலங்களில் விவசாய உற்பத்தி அதிகரித்தல், இது உள்ளூர் வளங்களின் அடிப்படையில் நடக்க வேண்டும், 6) கலப்பு, ரசாயன உரமில்லா விவசாயம் பயிர் சுழற்சியுடன், 7) கலப்பு ஆடுமாடு வளர்ப்பு, மலைச்சரிவு உழவு – சுழற்சி, 8) களை அரித்தல், 9) பலப்பல போகங்கள் விளைச்சல், 10) மண்வளப் பாதுகாப்புக்காக உழவு, 11) ரசாயன உரமில்லாமல் எருப்போடுதல், 12) ஊடுபயிர் 13) மாசுணம் சொல்லி ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தாமல் இருத்தல், 14) குறைந்த அளவில் பூச்சிக் கொல்லி இடுதல், 15) ஒருங்கிணைந்த வேளாண்மை, 16) பயோடைனமிக் வேளாண்மை, 17) ரசாயனப் பொருள்களே இல்லாத வேளாண்மை, 18) உற்பத்திப் பொருள்களின் தரமும் சுவையும் அதிகரித்தல், 19) கானுயிர்களின் பல்லுயிர்ப் பண்பு அதிகரித்தல், மேல்நிலம் வளமுற்றிருத்தல், 20) தரையடித் தண்ணீரும்,

**வளம்குன்றா வளர்ச்சி காண்பவர் கண்களில் இருக்கிறது**



தரைமேல் இருக்கும் தண்ணீரும் மாசுபடாமல் இருத்தல், 21) எதிர்காலத் தலைமுறையினருக்கு வளங்கள் பாதுகாக்கப்பட்டு இருத்தல், 22) தானே வளரும் பறவைகளின் எண்ணிக்கையும், அவை வளரும் நிலப்பரப்பும் அதிகரித்தல், 23) மண் வள அரிப்பு குறைதல், 24) நன்மை தரும் புழுபூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தல், 25) பயன்தராத ஆடுமாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருத்தல், 26) ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய உயிரினங்கள் வளர்ப்பில் ரசாயன மருந்துகளின் பயன்பாடு குறைதல், 27) மண்வளம், 28) ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், 29) குப்பைகளைப் பயன் மறுசுழற்சி செய்தல், 30) கம்போஸ்ட் – மக்கிய உரங்கள், 31) நெல்–மீன் சேர்ந்து வளர்தல், 32) விவசாயக் காடுகள் 33) பசுந்தாள் உரம், 34) நீள்குழிகள் வெட்டி, மண் அரிப்பு, நீர் வீணாவதைத் தடுத்தல், 35) நோய், பூச்சி தாங்கும் பயிர் வகைகள், 36) பூச்சிக் கொல்லி உயிரினங்களை வளர்த்தல், 37) நீர்ப்பாசனத்தில் முன்னேற்றம், 38) வெளியில் இருந்து வரும் இடுபொருள்களின் அளவைக் குறைத்தல், 39) அவற்றிற்குப் பதில் உள்ளூர் அறிவையும் தொழிலாளரின் நிர்வாகத் திறமையையும் பயன்படுத்துதல், 40) ரசாயன உரம் போடாத விளைச்சல் பொருள்கட்கென்று, சிறப்பான தனிச்சந்தை உருவாக்கம், 41) சமுதாயத்திற்கான நன்மைகள், 42) மண்/நீர் பாதுகாப்பு/சேமிப்பு, 43) நிலத்திற்குப் புனர்வாழ்வு, 44) ஊட்டச் சத்துப் பாதுகாப்பு, 45) சமுதாய ஒற்றுமை உணர்வு உயருதல்.

**15) வேளாண்மையில் வளங்குன்றா வளர்ச்சி ஏற்பட கொள்கைகள் எவ்வாறு உதவலாம்?** அ) சந்தையில் விலைவாசி சரியாக இருக்க உதவுதல் ஆ) உழவர்கட்கு நேரிடையாகப் பணம் கொடுத்தல் – வேலைக்கு உணவு, இ இடுபொருள் விலைகுறைப்பு ஈ) பொதுச் சேவை ஆராய்ச்சி, விரிவாக்கம் இவற்றை அளித்தல் உ) மறைமுகமான பிற உதவிகள், பிராந்திய அளவிலும், ஒவ்வொரு பயிருக்கும்.

**16) வளங்குன்றா வேளாண்மைக்கு சட்டம் எப்படி உதவமுடியும்?** 1) சிலவிதமான நிலங்களில் விவசாயம் செய்வது சட்டவிரோதம் என்று அறிவிக்க வேண்டும். அ) செங்குத்தான சரிவுகள் ஆ) ஆற்றங்கரை நிலம் இ) அரசு நிலம் ஈ) வனநிலம், 2) சிலவிதமான பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தடைசெய்தல், 3) அறுவடைக்கு சற்றுமுன் மருந்து தெளிப்பதைத் தடைசெய்தல், விளைச்சலில் நஞ்சு சேருவது குறையும். 4) ஆடு மாடுகட்கு ஆண்டிபயோடிக் மருந்துகள், வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் மருந்துகள் பயன்படுவதைத் தடுத்தல் 5) மரம் வெட்டுவதைத் தடுத்தல், 6) ஆடு மாடு வளர்ப்பில் மேல்மட்டத்தை நிர்ணயம் செய்தல் – இவ்வளவு நிலத்தில் இவ்வளவுதான் இருக்கலாம், 7) உழவர்கள் பயன்படுத்தும் பயிர் ரகங்கட்குச் சான்றிதழ் வழங்குதல் 8) உணவுப்பொருள், குடிநீர் இவற்றில் அனுமதிக்கப்படக்கூடிய அதிகபட்ச மாசு அளவினை நிர்ணயம் செய்தல், 9) நிலச்சீர்திருத்தம், பண்ணையின் அளவு, நிலக்குத்தகை எத்தனை ஆண்டு என்பது பற்றிய சட்டம்.

# சத்தியமும் தானமும்

விஃ ராமநாதன்

## தானம்

தானம் என்றதும் நினைவுக்கு வரும் இன்னொரு பெயர், கர்ணன். காலங்காலமாக, எதையும் பிரமாண சத்தியமாக ஏற்காமல், சோதித்துப் பார்ப்பது பெண்களின் வழக்கம். கிருஷ்ணனின் அத்தையான குந்தி தனக்குத் திருமணம் ஆகுமுன்பே, துர்வாச முனி கொடுத்த ஒரு வரத்தைச் சோதனை செய்து பார்த்தார். ஒருநாள் விடிகாலை அவள் ஆற்றங்கரையில் வழிபாடு செய்து கொண்டிருந்தாள். மகத்தான சூரியபகவான் கிழக்கே உதித்தார். அவரே உலகில் கண்ணுக்குத் தெரியும் ஒரே பகவான் என்று குந்தி எண்ணி, துர்வாசர் வரமாக அருளிய மந்திரத்தை ஓதினாள். அவளுக்கு ஆசியாக கர்ணன் என்ற மகன் பிறக்கிறான். அவன் ஒரு மாவீரன் ஆகிறான். அவ்வழகிய குழந்தை கவசம், குண்டலம் இவற்றுடன் விளங்குகிறது. தான் திருமணம் ஆகாமலே குழந்தை பெற்றுக் கொண்ட அசட்டுத்தனத்தை எண்ணி அவள் வருந்துகிறாள். அந்தக் கவசம் குழந்தையை, வாழ்நாள் முழுவதும் காப்பாற்றும். மனித அம்புகள் மட்டும் இன்றி, சூரியனின் நச்சுக்கிரணங்களில் இருந்தும் காப்பாற்றும். தந்தை சூரியபகவான் தன் குழந்தையைக் காப்பார். தன் மேலாடையில் குழந்தையைச் சுற்றி, புதிய சிசுவை ஆற்றில் மிதக்கவிட்டாள் குந்தி. தேரோட்டி ஒருத்தரும் அவர் மனைவியும் அக்குழந்தையை வளர்த்த கதை எல்லாம் நாம் அறிந்ததே.



குந்தியும், கர்ணனும்

மஹாபாரத யுத்தம் முடியும் வரை, குந்தி, தன் குழந்தையின் பிறப்பை ரகசியமாக வைத்திருந்தாள். கர்ணன், அர்ஜுனனைக் கொல்லமாட்டேன் என்று சத்தியம் செய்யும்படி கர்ணனைக் கேட்கும்படி கிருஷ்ணன் குந்தியைத் தூண்டுகின்றார். நம் நாட்டில் பெண்கள் ரகசியத்தைக் காக்கும் மனஉறுதி கொண்டிருக்கவே செய்தனர். ''சபலமே, உன்பெயர் பெண்'' என்று ஷேக்ஸ்பியர் ஹாம்லெட்டில் கூறியது, ஒரு மேற்கத்தைய கொள்கை.

குந்தி கர்ணனிடம் இருந்து ஒரு வாக்குறுதி பெற்றாள். கர்ணன் தங்கள் அண்ணன் என்று பாண்டவர்களுக்குத் தெரியாது. கௌரவர்களின் தீயசக்தியை அவர்கள் எதிர்த்துப் போராடினர். நிலைமை அவர்கட்கு அனுகூலமாகவே இருந்தாலும் அறப்போரில் பல நாட்களுக்கு, பாண்டவர்கட்கு வெற்றியே கிடைக்கவில்லை. கிருஷ்ணர் இந்திரனுக்கு (இந்திரன் அருளால்தான் அர்ஜுனன் பிறந்தான்) ஒரு ஆலோசனை கூறினர். கர்ணனிடம் போய் இந்திரன் ஒரு தானம் கேட்க வேண்டும். கொடை வள்ளலான கர்ணன் தன்னிடம் இருக்கும் எதையும் கொடுப்பதாகச் சத்தியம் செய்தவர். இந்திரன் கபடமாக, கர்ணனைக் காக்கும் கவசகுண்டலங்களைக் கேட்டான். கர்ணன் ஒரு கணமும் யோசிக்கவில்லை. தன்னைக் காப்பாற்றவல்ல, கவசகுண்டலங்களைத் தானம் செய்துவிட்டான் அவன். அத்துடன் அவன் வெற்றி வாய்ப்பும் போயிற்று! போரில் வெற்றி பெற தங்களுக்கு இருந்த ஒரே நம்பிக்கை நட்சத்திரம் கர்ணன்தான் என்று கௌரவர்கட்குத் தெரியும். கர்ணன் தன் கவசகுண்டலங்களைத் தானம் கொடுக்கப் போவதாக அறியவந்த கௌரவர்கள் தன் செயலை மறுபரிசீலனை செய்யும்படி கர்ணனை வேண்டினார். கர்ணனின் தந்தையான சூரியன் சொன்னான்: இந்திரன் அருளால் அர்ஜுனன் பிறந்துள்ளான். இந்திரனே (மாறுவேடத்தில்வந்து) தானம் கேட்கிறார். கொடுக்க வேண்டாம்'' அதற்கு கர்ணன் பதில் சொல்கிறான். (கர்ணபாரம் நூலில் இருந்து)

சீக்ஷா க்ஷயம் கச்சதி காலபர்யயாத் சுபதா மூல: நிபதந்தி

பாதப: (மிகப்பெரிய மரம், ஆழமாக வேர்விட்ட மரம் கூட எப்போதாவது விழவே வேண்டும்) ஜலம் ஜலஸ்தானம் கதம்ச சுஷ்யதி ஹீதம் ச தத்தம் ச ததைவ திஷ்டதி. (யாகத்தில் தட்சிணை, தானம்) இவை தகுதியுள்ளவர்கட்கும் ஏழைகட்கும் கொடுப்பதே சத்யமானது என்றும் உள்ளது) இவ்வாறு சொல்லிவிட்டு, பிறர் வெல்ல முடியாத பாதுகாப்பைத் தனக்கு அளிக்கும் பொருள்களை தானம் செய்து விடுகிறான். தன் உயிரையுமே!

இருப்பினும் பகைவர்களாய் கர்ணனைக் கொல்ல முடியவில்லை. ஏனெனில் அவனுடைய புண்ணிய கர்மங்களின் புண்ணியபலன் திரண்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்பைக் கர்ணனுக்கு அது தருகிறது. அவனுடைய தியாகம் அவனைக் காக்கிறது. இப்போது பகவானே ஒரு பிராம்மணன் வடிவில் வந்து கர்ணனிடம் பிச்சை கேட்கிறார். மாவீரன் கர்ணன், வீழ்ச்சியடைந்த வீரன், நெருக்கடியான நேரத்தில் தன் தேரோட்டியாலேயே கைவிடப்பட்டவன் தன் இயலாமையை எடுத்துரைக்கிறான். என்னிடம் கொடுப்பதற்கு என்னுடையதென்று எதுவும் இல்லையே! உன்னிடம் திரண்டிருக்கும் புண்ணிய பலத்தைக் கொடு என்று பகவான் நினைவூட்டுகிறான். தான வீரன் கர்ணன் தன் புண்ணிய பலத்தையும் கண்ணனுக்கு அர்ப்பணித்து விடுகிறான். இது அர்ஜுனன் கையில் கர்ணன் கொல்லப்பட வழி வகுத்தது.

நல்ல மனத்துடன் தானம் கொடுக்க வேண்டும் என்று வேதம் நமக்கு உத்தரவு போட்டுள்ளது. ச்ரத்தயா தேயம், அச்ரத்தயா அதேயம், ச்ரியாதேயம், ஹ்ரியாதேயம், பியாதேயம் என்கிறது உபநிஷதம். இதன் பொருள் வெறும் தானம் கொடுத்தால் போதாது. தகுதி உள்ளவர்கட்குப் பணிவுடன் கவனத்துடன் கொடுக்க வேண்டும். பெறுபவர் இந்த தானத்தினால் அதைப் பெறுபவன் இன்புறவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் கொடுக்க வேண்டும்.

கடைசியில் விதியைத் தவிர்க்க முடியாது என்று கர்ணன் அறிந்து கொள்கிறான். தெய்வீகத் தந்தை, வில்வித்தையிலும் நிர்வாகத்திலும் கற்ற அறிவு இவை இருப்பினும், வாழ்க்கை என்பது, ஏற்ற இறக்கங்கள் நிறைந்தது என்று அவனுக்குப் புரிகிறது. போரில் துரோகம் உண்டு என்றறிகிறான் அவன். பகவானுக்கு கூட தேவர்களும் கூட சமுதாயத்தில் அவனுக்கு இருக்கும் நியாயமான மரியாதையைக் கொடுக்க மறுக்கின்றார்கள். விதி அவன் வாழ்க்கையை முற்றிலுமாக நாசம் செய்தது. தீய சக்திகள் அவனை கௌரவர்கள் பக்கம் சாயச் செய்தன. அவனுடைய அன்னை, கர்ணன் தான் தன் முதல் மகன் என்று உலகின் முன் நியாயமாக ஒத்துக் கொண்டிருந்தால், பாண்டவ கௌரவர்களின் தலைவிதியே முற்றிலும் வேறுவிதமாகப் போயிருக்கும். கௌரவர்கள், பீஷ்ம பிதாமஹரின் ஆலோசனையைக் கேட்டு, ஐந்து அல்ல ஆறு குந்திபுத்திரர்களை எதிர்க்கத் துணிந்திருக்க மாட்டார்கள். ஆனால் பாவம் அவ்வாறு நடக்கவில்லையே! தர்மசக்திகளுடன் சேர்ந்து தீமையுடன் போரிட கர்ணனுக்கு வாய்ப்பே கிட்டவில்லை. துரியோதனனும் கைகோர்த்துக்கொண்டு தர்மப்போரில் தவறான கட்சியில் நிற்கவேண்டியதாயிற்று அவனுக்கு!

தாய் கங்காதேவியினால் பாதுகாக்கப்பட்ட பீஷ்ம பிதாமஹர் தன் உடலை நீத்துச் செல்ல உத்தராயணம் வரட்டும் என்று காத்திருந்தார். நேர்மையாளர் தர்மபுத்திரர் அவரிடம் இருந்து நியாயமான அரசாட்சி பற்றிப் பாடம் கேட்டுக் கொண்டார். கிருஷ்ணபகவானும் கூட, பீஷ்மரின் அறிவுரையை நாடினார். உயிர் வேகம் தணிந்து கொண்டிருந்த பீஷ்மரிடம் சகதேவன் ஒரு கேள்வி கேட்டான். பாண்டவர்கள் கட்சியில் நியாயம் இருக்கிறது என்றறிந்தும் பீஷ்மர் கௌரவர்கள் பக்கம் இருந்ததேன்? வித்துவான் பீஷ்மர் பதில் சொன்னார். துரியோதனனின் உப்பைத் தின்றதால் அவன் பக்கம் நிற்கவேண்டியதாயிற்று. சாப்பாட்டின் குணம், போடுபவரின் குணம், சாப்பிடும் இடம் இவையும் கூட ஒரு மனிதனின் இன்ப துன்பங்களைத் தீர்மானம் செய்கிறது. ஆகவே இளைஞர்களே, ஜாக்கிரதை! அதிக உணவு வகைகளை உண்ணாதீர்கள். வீட்டில் சமைத்த சாத்துவிக உணவை உண்ணுங்கள். நேர்மை, நியாயம் கொண்ட வாழ்க்கை வாழுங்கள். இல்லாவிடில் பலவான் பீஷ்மர்போல் தவறான கட்சியில் போய் விழுந்து விடுவீர்கள்.

செல்வமும், ஆண் படையும், பணமும், அதிகாரமும் ஒருவரைக் காத்தாலும் தலைவிதியை ஒருவரால் மீற முடியாது. விதியின் கை எழுதிக் கொண்டே முன்னால் போகிறது. உங்கள் பக்தியோ, உத்தரவோ, விதி எழுதியதில்

அரை வரியைக் கூட அழித்துவிடும்படி விதிக்கு ஆசைகாட்ட முடியாது. உங்கள் கண்ணீர்ப் பெருக்கு, விதியின் எழுத்தில் ஒரு சொல்லைக் கூட அழிக்க முடியாது என்கிறார் ஒரு கவி. தீமையில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள ஒரே வழி புண்ணியச் செயல்களின் நற்பயனைச் சேமித்து வைத்துக் கொள்வதுதான், தர்மப்பாதையில் நடப்பதுதான். சத்தியத்தைப் பற்றி நிற்பதுதான். ஏழைக்கும் தேவைப்படுபவர்கட்கும் தானம் கொடுப்பதுதான். கௌரவர்களுடன் சேர்ந்து, சத்சங்கம் இல்லாமல் போனதுமே கர்ணனின் விதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது.

நம் புராணங்களின்படி முழு நல்லது, முழுமையான தீயது என்பவை இல்லை. சுத்தக் கறுப்பு, தூய வெள்ளை என்பது கிடையாது. சாம்பல் நிறப்பகுதிகளும் உண்டு. ஹிரண்ய கசிபு, ராவணன் ஆகியோரிடமும் நல்ல அம்சங்கள் இருந்தன. வானர ராஜன் வாலி தன்மீது மறைந்திருந்து அம்பு போட்ட ராமனைக் கடிந்து கொண்டான். இந்தத் தீயவர்களில் பலர் கண்ணியத்துடனும், நேர்மையுடனும் நடந்து கொண்ட சம்பவங்கள் உண்டு. உண்மையான கதாநாயகர்களைவிட மேன்மையாக நடந்து கொண்ட கணங்கள் உண்டு.

மனிதன் நன்மையும், தீமையும் கலந்த ஒரு கலவை. அவை இரண்டும் மனிதனின் உயிர்க்கருவில் இருக்கின்றன. வளரும் பருவத்தில் உள்ள இளைஞர்கள் நல்லதைத் தேர்ந்தெடுத்து, அறப்பாதையில் நடக்க வேண்டும். நம் கதாநாயகர்கள் வில்லன்கள் ஆகியோரிடம் இருக்கும் நற்குணங்களைத் தேடி அவற்றைப் பின்பற்றுங்கள். அறப்பாதையில் நடந்து செல்லுங்கள். சந்தர்ப்பச் சூழ்நிலைகள் நம் பாதையில் தடைகளை ஏற்படுத்தலாம். இறை நம்பிக்கையுடனும், தன்னம்பிக்கையுடனும் அவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். இரவும் பகலுமான கட்டங்கள் விளையாட்டுப் பலகையில் தீட்டப்பட்டுள்ளன. விதி மனிதனைப் பகடைக்காய்களாக நகர்த்துகிறது. நண்பா! இங்கும் அங்குமாக அவனை நகர்த்தி, அவனை மாய்க்கிறது. ஒருவர் ஒருவராக இறுதிக் கட்டத்தில் அவர்களைத் தள்ளிவிடுகிறது – என்கிறார் ஒரு கவி.

முடிவு நம் கையில் இல்லை. விதியின் கை நம் விரல்களை நகர்த்துகின்றது. ஆனால் சரியான வழியில் போய், தடைகளைத் தவிர்ப்பது நம்மிடம் உள்ள சக்தியாகும்.

உயர்சாதி அந்தணர்கள், புராணங்களை எடுத்து பிறரைத் தாழ்த்தி வைக்கவே, புராணங்களை எழுதினர் என்று சிலர் பிரச்சாரம் பண்ணுவார்கள். இதை நம்பிக் கெடாதீர்கள். நம் மத நம்பிக்கை, பிறப்பின் அடிப்படையில் மட்டும் ஒருவனின் இடத்தைத் தீர்மானிப்பதில்லை. இறை அவதார ஸ்ரீராமர் வனவாசியான சபரிதந்த பழங்களை உண்டார். நாம் ராமாயணம், மஹாபாரதம் இவற்றைப் புனித நூல்களாக ஓதுகின்றோம். இவற்றை எழுதியவர்கள் பிராமணர்கள் அல்லர். கீதை எனும் தத்துவ நூலை எழுதிய ஸ்ரீகிருஷ்ணர், கேட்ட அர்ஜுனர் இருவருமே பிராமணர்கள் அல்லர். ஐதரேய உபநிஷதத்தை எழுதியவர் ஒரு குயவர். நம் மரபு இத்தகையது.

கர்ணன், சிபி, மஹாபலி, ப்ரஹலாதர் ஆகிய புராணப் பாத்திரங்கள் ஒவ்வொருவரும் ஒரு நற்குணத்தைக் காட்டுபவரே! சாதாரண மக்களாகிய நாம் புராணங்களைப் படித்து, அவற்றில் வரும் ஆடவர் மகளிரின் நற்குணங்களைப் பின்பற்றுவோமாக!

கெட்டகாலத்திலும் தன் நம்பிக்கைகளில் உறுதியாக நிற்க வேண்டும் என்று கர்ணன் கதை நமக்குக் கூறுகிறது. தேசத்தை அவமரியாதையில் இருந்தும் பேரழிவில் இருந்தும் காப்பாற்ற வேண்டும் என்றாலும் நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும் என்றால் இதுவே வழி. சாதாரணக் குடிமகன் தானும் சபலங்களைத் தாண்டி நிற்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் வற்புறுத்தி, நீதிஒழுக்கம், சட்டம் ஆயவற்றை வாழ்க்கையிலு,ம் நிர்வாகத்திலும் பின்பற்றும்படி செய்யவேண்டும். மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பார்கள். கலியுகத்தில் மக்கள் எவ்வழியே அவ்வழியிலேயே நம்மை ஆள்பவர்களும் நடப்பார்கள். எந்த அரசுக்கு நமக்குத் தகுதி உண்டோ அந்த அரசே நம்மை ஆளும். நம் அரசியல் அமைப்பு, விதிமுறைகளும், புராணங்களும் கூறும் நன்னெறிகளை, மக்களும் பின்பற்ற வேண்டும். நம்மை ஆளுபவர்களையும் பின்பற்றச் செய்யவேண்டும்.

### கேந்திரச் செய்திகள்

கன்னியாகுமரி விவேகானந்த கேந்திராவில் 63-வது பாரதக் குடியரசு தினவிழா வந்தேமாதரம் நிகழ்ச்சியுடன் தொடங்கிற்று. பொருளாளர் ஹனுமந்தராவ்ஜி தேசியக் கொடியை ஏற்றல், ஆசிரியை தங்க ஜானகியின் வரவேற்புரை, ஹிந்திப் பாடல், தினச் சிறப்புரை, தமிழ்ப் பாடல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. விவேகானந்தா பொறியியல் கல்லூரி முதல்வர் திரு. ஆர்.ஜே. ராம்குமார் குடியரசு தினம் பற்றி சிறப்புரை ஆற்றினார். சுதந்திர வீரர்களில் புகழ்பெற்ற வ.உ.சி. பற்றிய தமிழ் நாடகத்தை மாணவர்கள் நடத்தினர். நம் தியாக வரலாற்றை ஹனுமந்தராவ் நினைவு கூர்ந்தார். ஆளுமைத் திறன் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆசிரியை முத்துக்கனியின் நன்றியுரை, கேந்திரப் பிரார்த்தனை இவற்றுடன் விழா நிறைவடைந்தது.

**திருமதி. நளினி கண்ணன், 2 - சுப்ரமணியநகர்,**
**பிரதான சாலை, கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

**அஞ்சலி!**

**போற்றுதலுக்குரிய டாக்டர் ஜோசப் எ.எல். பேனஸ், அமைச்சர் மற்றும் தலைவர், நிர்வாக சபை**
**திருமதி சரோஜினி பேனஸ், செயலாளர் மற்றும் பொருளாளர், மெட்ராஸ் இங்கிலீஷ் பாப்டிஸ்ட் சர்ச், சென்னை**

உங்களது இழப்பில் நாங்கள் பங்கு கொள்கிறோம். இந்த உங்களுடைய ஏகாந்த வேளையில் இறைவனின் உதார குணமும், கருணையும் உங்களது வலது கரத்தில் இருக்க அவரிடம் பிரார்த்திக்கிறோம்.

''துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்'' பைபிள் – மாத்யூ 5.4

**குலபதி எஸ். பாலகிருஷ்ண ஜோஷி, கல்வியாளர், சென்னை**

திடசங்கல்பம் மற்றும் வாழ்க்கையில் உயர்ந்த லட்சியங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கொள்கை கொண்ட அவர், ஒரு லட்சியவாதி. தேசபக்தருள் ஒரு இளவரசன். அவர் விதியை வெல்லக்கூடிய, சரித்திரத்தை உருவாக்கக்கூடிய, வீரர்களின் அச்சில் வார்க்கப்பட்டவர்.

ஸ்தூல சரீரத்தோடு இருக்கையில் அவர் ஒரு தனிமனிதர். கண்ணியமான



SHRI EKNATHJIRANADE
1914-1982

அன்புடன் கூடிய பாராட்டைப் பெறத் தகுதியானவர். இன்று அவர் மனஉறுதியின் உள்ளுறைச் சக்தியையும், உன்னதமான கொள்கையின் நிறைவேற்றுதலையும் அடையாளம் காட்டும் ஓர் ஸ்தாபனம்.

என்றென்றைக்கும் அவருடைய நினைவு உத்வேகத்தின் உறைவிடமாக இருக்குமாக!

## திரு. சத்தீஷ் அகர்வால், பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், பொதுக்கணக்கு குழு (பாராளுமன்றம்) புதுடெல்லி

அவருடைய மறைவில் நாடும் முக்கியமாக விவேகானந்த கேந்திரமும் சமுதாயத்தில் மனிதநேயத்தைக் கட்டிக் காக்க தனது முழுவாழ்க்கையையும் அர்ப்பணித்துக் கொண்ட தலைசிறந்த தனயர்களுள் ஒருவரை இழந்துவிட்டது. இந்த மேன்மையான ஆன்மாவிற்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்துவதில் நான் உங்கள் அனைவருடன் பங்கேற்கிறேன்.

## திரு. என்.கே. ஷேஜ்வால்கர், பாராளுமன்ற உறுப்பினர், புதுடெல்லி

அவருடனான எனது தொடர்பு 45 வருடங்களுக்கு முந்தியது. நான் பல வருடங்கள் அவருடைய வழிகாட்டுதலின்கீழ் பணிபுரியும் பாக்கியம் பெற்றிருந்தேன். மென்மையான உணர்வுகளாலும், உறுதியான பணியினாலும் நாட்டை உருவாக்குதல் மற்றும் மனித நேயத்தை ஒவ்வொருவரிடமும் விருத்தியடையச் செய்தல் ஆகியவற்றுடன் கூடிய அவருடைய பெருந்தன்மையும் லட்சியத்திற்கான முழு அர்ப்பணிப்பும், ஒரு அபூர்வமான கூட்டுச்சேர்க்கையாக விளங்கியது. விவேகானந்தரின் நினைவாலயம் என்பது ஸ்ரீ ஏக்நாத்ஜியின் சாதனைகளின் நினைவாலயமே. அவருடைய வாழ்க்கை முழுவதும் அவர் காண்பித்த பாதையை நாம் பின்பற்றுவது நமது கடமை. இறைவன் அந்த மனப்பான்மையை நமக்குக் கருணையுடன் ஊட்டுவான் என்று நான் நம்புகிறேன்.

## திரு. பி. வெங்கடசுப்பையா, உள்துறை மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான ராஜாங்க அமைச்சர், புதுடெல்லி

இந்தப் பூவுலகிலிருந்து அவருடைய மறைவு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இது கேந்திரத்திற்கு மிகப்பெரிய இழப்பு. கேந்திரம் மா. ஏக்நாத்ஜி விட்டுச் சென்றுள்ள அர்ப்பணிப்பு என்ற உயர்ந்த லட்சியத்தையும், அன்பையும் கட்டிக் காக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன். அவரை நேசிக்கும் அனைவருடன் சேர்ந்து நான் எனது அஞ்சலியை அவருடைய போற்றுதலுக்குரிய ஆன்மாவிற்குச் செலுத்துகிறேன்.

## திரு. குர்ஷித் ஆலம்கான், சுற்றுலாத்துறை ராஜாங்க அமைச்சர், புதுடெல்லி

திரு. ரானடே ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்துள்ளார். கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவாலயம் அவருடைய குறிப்பிடத்தக்க சாதனைக்கான ஒரு நேர்த்தியான உதாரணம். வரும் தலைமுறையினர் திரு. ஏக்நாத்ஜி ரானடேயின் குணாதிசயங்களையும், பெருவிருப்பத்தையும் மனதில் கிரகித்துக் கொண்டு சமுதாய மேன்மைக்காகவுமம் விசாலமான மனிதகுல மேம்பாட்டிற்காகவும் தங்களை அர்ப்பணிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

## திரு. ஜிதேந்திர வீர்குப்தா, நீதிபதி, பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம், சண்டிகார்

ஸ்ரீமத் பகவத்கீதை முன்நிறுத்திய சுவாமிஜி உபதேசித்த பெருமைமிக்க இனத்தைச் சேர்ந்த மிகப்பெரிய கர்மயோகி அவர். சுருங்கச்சொன்னால், சுவாமி விவேகானந்தருக்கும், தற்கால இந்திய மக்களுக்கும் இடையே ஒரு தொடர்பாக திரு. ரானடே திகழ்ந்தார். திரு. ஏக்நாத்ஜி ரானடேயை ஒரு லட்சிய புருஷராக, தொண்டராக, தலைவராக, மிகப்பெரிய தேசபக்தராகக் கொள்வதில் நாம் திருப்திப்பட்டுக் கொள்ள முடியும்.

## திரு. நரேந்திரஜித் சிங், வழக்கறிஞர், கான்பூர்

அகில இந்திய வானொலியில் போற்றுதலுக்குரிய ஏக்நாத்ஜியின் எதிர்பாராத துக்ககரமான மறைவுச் செய்தியைக் கேட்டது உண்மையிலேயே மிகப்பெரிய அதிர்ச்சியை அளித்தது. நான் அவரை ஜுலை 13-ம் தேதி டெல்லியில் சந்தித்தேன். அவர் அப்போது நல்ல உடல் தகுதியுடன் காணப்பட்டார். உண்மையில் அவர் முற்றிலும் நன்றாக இருப்பதாகவும் முன்பு ஜுன் மாதத்தில் வெளியிடப்பட்ட அவருடைய புதுத்திட்டங்களை ஏற்று நடத்த உடல் தகுதியுடன் இருப்பதாகவும் அவரே கூறினார். அவர் உண்மையிலேயே ஒரு உலக முன்மொழிவாளர். அவர் எடுத்துக்கொண்ட எந்த ஒரு திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றல் கொண்டவர். விவேகானந்தர் பாறை நினைவாலயமும், கேந்திரமும் இளமையூட்டப்பட்ட பாரதத்தினைப் பற்றிய அற்புதமான அவருடைய பார்க்கும் திறனின் உருவாக்கங்களே. அவருடைய தளர்விலா உற்சாகம், தொலைநோக்கு மற்றும் நிர்வாகத்திறன் மட்டுமே அத்தகைய ஒரு நினைவாலயத்தை சாத்தியமாக்க முடிந்தது. அவர் உருவாக்கிய விசுவாசமுள்ள தொண்டர் குழுவினால் கேந்திரத்தின் பணி புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் வளர்ச்சி அடையும். நாம் ஏக்நாத்ஜியின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுப்போம் என்று நான் திடமாக நம்புகிறேன். அவர் எந்த நிலையிலும்

அழிவில்லாத சிரஞ்சீவியாக ஆகிவிட்டார். அவர் விட்டுச் சென்றுள்ள ஸ்தாபனங்கள் நிச்சயமாக அவர் ஏற்றிய தீபத்தை உலகின் எல்லா மூலைகளுக்கும் ஏந்திச் செல்லும்.

**திரு. தாணுலிங்க நாடார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், நாகர்கோவில்**

நமது நாட்டில் கர்மயோகிகளும், தியாகிகளும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். சுதந்திரத்திற்கு முந்தைய நாட்களின்போது ஒரு ரானடே இருந்தார். இன்றைய நாட்களில் அவ்வாறான ஒருவரைக் காண்பது ஒரு அரிதான காட்சியாகிவிட்டது. ஏக்நாத்ஜி ரானடேயிடம் வருங்காலத்திற்காக அனேக திட்டங்களும், எண்ணங்களும் இருந்தன. ஆனால் ஒருவேளை பாரத்மாதா அவரை அவளிடம் திரும்ப அழைத்து ஓய்வளிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்தாள் போலும்.

**திருமதி சசிகலா ஜி. கக்கோட்கர், டார்டெஜ்–கோவா, பனாஜி**

இழப்பை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. உழைத்துக் கொண்டிருக்கும்போதே இறப்பு ஏற்படவேண்டும் என்று அவர் விரும்பியபடி அவர் இறந்துபோனார் என்ற எண்ணம் சிறிதளவாவது ஆறுதலைத் தந்தது.

**திரு. யஷ்வந்த்ராவ் சவான், புதுடெல்லி**

இதயநோயால் தாக்குண்டு ஏக்நாத்ஜி இறந்து போனார் என்ற துக்ககரமான செய்தி என்னை வந்தடைந்தது. விவேகானந்த கேந்திரத்தில் இருக்கும் உங்கள் அனைவருக்கும் உண்மையிலேயே இது ஒரு மிகப்பெரிய இழப்பு. ஆனால் ஸ்ரீ ஏக்நாத்ஜியின் உயர்ந்த லட்சியங்களை உயர்த்தி பிடிக்கும் உங்கள் முயற்சியில் நீங்கள் ஒருபோதும் பின்தங்கமாட்டீர்கள் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

**திரு. பி.வி. நரசிம்மராவ், வெளியுறவு அமைச்சர், புதுடெல்லி**

நான் மா. ஏக்நாத்ஜி ரானடேயின் மறைவினால் ஏற்பட்ட துன்பத்தில் உங்களுடன் பங்கு கொள்கிறேன். நீங்களும் விவேகானந்த கேந்திரத்தில் உள்ள உங்களுடைய நண்பர்களும் அவர் தாங்கி நின்ற கொள்கைகளுக்காக தொடர்ந்து பாடுபடுவீர்கள். அதன்மூலம் அவருடைய நினைவைப் போற்றிக் காப்பாற்றுவீர்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்.

**திரு. ஆர். அண்ணாமலை, உறுப்பினர், நிர்வாகக்குழு, விவேகானந்த கேந்திரம்**

1966-ல் ஸ்ரீ ஏக்நாத்ஜி விவேகானந்தர் பாறையின் அமைப்புச் செயலாளர் ஆனார். அவர் அப்போது கண்ட கனவு விரைவிலேயே விரிவான,

கண்ணுக்குப் புலப்படும் தோற்றத்தைப் பெற்றது ஒரு பெரிய திட்டமாக உருவெடுத்தது. கன்னியாகுமரி உலக வரைபடத்தில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றது. ஏக்நாத்ஜியின் முயற்சியால் கட்டப்பட்ட புகழ்மிக்க சுவாமி விவேகானந்தர் பாறை நினைவாலயத்தால்தான் என்பதை இன்று ஒவ்வொருவரும் அறிவர். இந்த நினைவாலயத்தால், கன்னியாகுமரியில் ரயில் வசதி, தொலைத்தொடர்பு வசதி போன்ற பல வளர்ச்சித் திட்டங்களை நாம் பெற்றோம். ஏக்நாத்ஜி பல வேறுபட்ட துறைகளில் முத்திரை பதித்த ஒரு எளிமையான மனிதர். அவர் ஒரு தன்னலமற்ற வாழ்க்கையை மேற்கொண்ட தலைசிறந்த சிந்தனையாளர். அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான காணிக்கை அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளைத் தொடர்வதே.

**திரு. ஆறுமுகம், பணியாளர், விவேகானந்த கேந்திரம், கன்னியாகுமரி**

சுவாமி விவேகானந்தர் உபதேசத்தால் உத்வேகமடைந்த பல வெளிநாட்டினருக்கு பாறை நினைவாலயம் ஒரு புனித ஸ்தலமாக விளங்குகிறது. இந்த நினைவாலயத்தைக் கட்டுவதற்கு காரணகர்த்தாவாகத் திகழ்ந்த – ஏக்நாத்ஜி சாதனையின் மொத்த உருவம். அவருடைய முகத்தோற்றம் அவருள் இருந்த விவேகத்தை, வீரதீரத்தை, மனோதிடத்தை பறைசாற்றிற்று. கன்னியாகுமரிக்கு நாடு முழுவதிலும், உலகிலும் பெயரும், புகழும் ஏற்படக் காரணமாக இருந்தவர் ஸ்ரீ ஏக்நாத்ஜி ரானடேயே.

**சுவாமி ரங்கநாதானந்தா, ராமகிருஷ்ண மடம், ஹைதராபாத்**

நமது ஏக்நாத் ரானடே சுவாமி விவேகானந்தர் பெருமை கொள்ளும் தீரமான தேசபக்தர்கள். தொண்டர்கள் இனத்தைச் சேர்ந்தவர். இந்தியாவின் நீண்ட ஒளிமயமான சரித்திரத்தில் நவீனகாலத்தில் நிகழ்வனவற்றின் முழுப்பலனையும் அவள் எடுத்துக் கொள்வதற்கு ஏதுவாக நமது நாட்டின் ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், குழந்தையையும் ஜாதி, மத, இனவேறுபடின்றி மனித கௌரவத்தின், சுதந்திரத்தின், சமத்துவத்தின் உச்சிக்கு உயர்த்த இந்தியா அத்தகைய ஆயரக்கணக்கானோரை உருவாக்க வேண்டும் என்று சுவாமிஜி உண்மையிலேயே விரும்பினார். இதுவே நமது நவீன கால சரித்திரத்தின் மிக உயர்ந்த கருத்தாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார்.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு. ஜி. மதிவாணன், சென்னை

நமது ஏக்நாத்ஜி அந்த தத்துவத்தின் அடிப்படையில் வாழ்ந்து, பணிசெய்து வெறுமனே மாண்டுவிடவில்லை. ஆனால் அவர் ஆரம்பித்து வைத்த பிரம்மாண்டமான பணியைத் தொடர எப்போதும் அதிகரித்து வரும் இளம் தொண்டர்கள் குழுவையும் விட்டுச் சென்றுள்ளார். அந்தப்பணி அமைதியாக, உறுதியாக சுவாமி விவேகானந்தர் வழிகாட்டியபடி தொடரும்.

''இது ஒருநாளில் ஆகக்கூடிய காரியமல்ல. இதன் பாதையும் அதிபயங்கரமான முட்கள் நிறைந்ததாக உள்ளது. ஆனால் பார்த்தசாரதி நமது சாரதியாக இருக்க ஆயத்தமாக உள்ளார் என்பதை நாம் அறிவோம். அவரது பெயரால் அவரிடம் நிலையான நம்பிக்கை வைத்து யுகம்யுகமாக இந்தியாவின் மீது குவித்து வைக்கப்பட்டுள்ள துயரமலைக்குத் தீயிடுங்கள். அது நிச்சயமாக எரிந்து சாம்பலாகிவிடும். எனவே சகோதரர்களே வாருங்கள். வந்து அதை தைரியமாக உற்று நோக்குங்கள். அது மகத்தானதொரு செயல்தான். நாம் மிகவும் தாழ்ந்தவர்கள். ஆனாலும் நாம் பேரொளியின் புதல்வர்கள். கடவுளின் குழந்தைகள், இறைவனுக்கு வாழ்த்துக் கூறுவோம். நாம் வெற்றி பெற்றே தீர்வோம். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் வீழ்ந்து மடிவார்கள். உடனே நூற்றுக்கணக்கானவர்கள் இதில் ஈடுபட ஆயத்தமாக எழுவர் .... இறைவனின் பெருமையைப் பாடுவோம். முன்னேறிச் செல்லுங்கள். இறைவனே நமது தளபதி. விழுபவர்களைத் திரும்பி பார்க்காதீர்கள். முன்னோக்கியே சென்று கொண்டிருங்கள். மேலும் மேலும் செல்லுங்கள். சகோதரர்களே இந்த முறையில் நாம் போய்க் கொண்டேயிருப்போம். ஒருவன் வீழ்ந்ததும், மற்றொருவன் அப்பணியை ஏற்றுக் கொள்வான்.''

சுவாமிஜி சென்னையைச் சேர்ந்த அவருடைய அன்பார்ந்த அளசிங்கருக்கு எழுதிய இந்த உத்வேகமூட்டும் கடிதத்தின் உட்கருத்து உங்கள் எல்லோருக்கும் உற்சாகமூட்டட்டும். இதுவே எனது பிரார்த்தனை.

**(தொடர் நிறைவு)**


பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை - 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 70/-

**அமரர் சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் நினைவாக**

# சகோதரி நிவேதிதை

பேராசிரியை திருமதி. ஆர். நாகம் சுப்பிரமணியம்

## நிவேதிதையின் கல்விச் சிந்தனைகளும், கோட்பாடுகளும்

ஒரு குழந்தை தானறிந்த ஒரு வார்த்தையை அல்லது தன்னால் புரிந்து கொள்ள முடிந்த ஒரு ஒலியைக் கட்டாயம் எழுதத் தெரிந்தே ஆகவேண்டும். எண்ணும், எழுத்தும் கற்பிக்கும் ஒரு ஆசிரியை தனக்குத்தானே வகுத்துக் கொள்ள வேண்டிய ஒரு கடினமான விதி இது. ஒரு குழந்தை எழுதப் பழகும் பொழுது தானாகவே மேற்கொள்ளும் முயற்சிகளையும், தடுமாற்றங்களையும் போன்ற போராட்ட முயற்சியை மிஞ்சிய முயற்சி வாழ்க்கையில் வேறெதும் இல்லை என்கிறார் நிவேதிதை. இவ்வாறு ஒரு குழந்தை முயற்சி மேற்கொள்ளும் பொழுது அருகில் உள்ள பெரியவர்கள் எள்ளி நகையாடுவதைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறும் நிவேதிதை அவ்வாறு எள்ளி நகையாடுவதைக் 'கொடுமை' என்றே அழைக்கிறார்.



பிளேக் நோய் நிவாரப்பணி

கல்வி கற்கத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இருந்தே சுய முயற்சியில் ஊக்கப்படுத்தப்பட்ட குழந்தைக்கு ஏழு அல்லது எட்டு வயதில் தெளிவாக, அழகாக எழுதும் கைப்பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. இந்நிலைக்குப் பிறகு மிக முக்கியமாக ஒரு குழந்தைக்குக் கற்பிக்கப்படவேண்டிய ஆற்றல் கட்டுரை எழுதும் ஆற்றல்.

ஒரு ஏழுவயதுக் குழந்தைக்குத் தான் கட்டுரை எழுதக் கற்பித்த முறையை விளக்குகிறார் நிவேதிதை. அக்குழந்தைகள் ‘சாய்வு மேசை’ மீது ஒரு சிவப்பு ரோஜாவை வைத்து இந்த மலரைப் பற்றி உனக்கு என்னவெல்லாம் எழுதத் தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் எழுது என்றார் நிவேதிதை. மிக மகிழ்ச்சியோடு தன் பேனாவை எடுத்தது அந்தக் குழந்தை. சிறிதுநேரம் அமைதியாக இருந்தது. பின்னர் நிவேதிதை அவளது பயிற்சிப் புத்தகத்தைக் கொண்டு வருமாறு கூறியதும், கீழ்க்கண்ட வரிகளை அவள் எழுதியிருப்பதைக் கண்டார்.

ரோஜாவின் நிறம் சிவப்பு. ரோஜா பல சிவந்த இதழ்களைக் கொண்டது. கூடவே சில பச்சை இலைகளும் ரோஜாவுக்கு உண்டு.

தண்டில் வளரும் முட்கள் குத்திவிடும்
காட்டுரோஜா, தோட்ட ரோஜா
என இருவகை ரோஜா மலர்கள் உண்டு.
நிறையக் காணப்படும் இலைகளில்
நிறைய நரம்புகள் இருக்கும் ரோஜா இனிமையாய் மணக்கும்
தோட்ட ரோஜாவானாலும், காட்டு ரோஜாவானாலும்
புதர்களிலேதான் வளரும்.

குழந்தையிடம் இது கவிதையா என்று கேட்டதும், குழந்தை நாணத்துடன் அதேநேரம் மகிழ்ச்சியுடன் தலையைக் குனிந்து, கிழ்நோக்கிய வண்ணம், கன்னம் சிவக்க ஆம் என்றது. பிற குழந்தைகள் உடனேயே மகிழ்ச்சிக் குரல் எழுப்பிக் கூவினர். இந்நிகழ்ச்சிக்குப் பின் நிவேதிதையின் மாணவக் குழந்தைகளுக்குக் கவிதையெழுதுவது ஒரு விருப்பமான பழக்கமாகவே ஆகிவிட்டது. சுற்று, முற்றும் உள்ள எல்லா மலர்களும், வேறு இனிய காட்சிகளும் குழந்தைகளின் கவிதைகளுக்குக் கருப்பொருட்கள் ஆயின. ஒரு சிறுவன் ஒரு கவிதை எழுதிக் கொண்டு வந்து ‘‘கவிதையின் கீழே நான் ஆசிரியரைக் குறிப்பிடலாமா’’ எனக் கேட்டான். இவ்வாறு சின்னச் சின்ன முயற்சிகளில் குழந்தைகளை ஈடுபடச் செய்து சின்னச் சின்ன சந்தோஷங்களைக் குழந்தைகள் அனுபவித்தால், பின்னர் தாமாகவே அவர்கள் நீண்ட கவிதைகளைப் படைக்கும் ஆற்றலையும், எதையும் கவித்துவத்தோடு வெளியிடும் ஆற்றலையும் பெற்று விடுவர்.

குழந்தையிடம் இது கவிதையா என்று கேட்டதும், குழந்தை நாணத்துடன் அதேநேரம் மகிழ்ச்சியுடன் தலையைக் குனிந்து, கிழ்நோக்கிய வண்ணம், கன்னம் சிவக்க ஆம் என்றது. பிற குழந்தைகள் உடனேயே மகிழ்ச்சிக் குரல் எழுப்பிக் கூவினர். இந்நிகழ்ச்சிக்குப் பின் நிவேதிதையின் மாணவக் குழந்தைகளுக்குக் கவிதையெழுதுவது ஒரு விருப்பமான பழக்கமாகவே ஆகிவிட்டது. சுற்று, முற்றும் உள்ள எல்லா மலர்களும், வேறு

இனிய காட்சிகளும் குழந்தைகளின் கவிதைகளுக்குக் கருப்பொருட்கள் ஆயின. ஒரு சிறுவன் ஒரு கவிதை எழுதிக் கொண்டு வந்து ''கவிதையின் கீழே நான் ஆசிரியரைக் குறிப்பிடலாமா'' எனக் கேட்டான். இவ்வாறு சின்னச் சின்ன முயற்சிகளில் குழந்தைகளை ஈடுபடச் செய்து சின்னச் சின்ன சந்தோஷங்களைக் குழந்தைகள் அனுபவித்தால், பின்னர் தாமாகவே அவர்கள் நீண்ட கவிதைகளைப் படைக்கும் ஆற்றலையும், எதையும் கவித்துவத்தோடு வெளியிடும் ஆற்றலையும் பெற்று விடுவர்.

**இந்தியக் குழந்தைகளுக்கேற்ற சிறுவர் தோட்டக் கல்விமுறை அல்லது மழலையர் தோட்டக் கல்வி முறை** : சிறுவர் தோட்டக் கல்விமுறை ஃப்ரோபெல் என்ற ஜெர்மானியரால் உருவாக்கப்பட்டது. ஃப்ரோபெல் உருவாக்கிய இக்கல்விமுறை பெஸ்டலோஸியின் இரு முக்கியமான கல்விக் கோட்பாடுகளை உள்வாங்கி உருவாக்கப்பட்டது. அறிவு புலனுணர்வு மூலமே பெறப்படுகிறது. பருமை அனுபவங்கள் மூலமே அருவச் சிந்தனையும், எண்ணங்களும் தோன்றுகின்றன என்பது பெஸ்டலோஸியின் முதல் கோட்பாடு. எந்தக் குழந்தையும், தன் பருமை நுண்ணிய மற்றும் அருவச் சிந்தனைகளின் வளர்ச்சியின் போது தன்னுடைய இனத்தின் தன்மைகளைச் சார்ந்தே வளர்கிறது. ஆகவே குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்விச் சாதனங்களும், குழந்தைகளிடம் ஏற்படுத்த முயலும் கைவினை ஆற்றல்களும் குழந்தைகளின் இனம் சார்ந்தவையாகவே இருத்தல் வேண்டும். ஜெர்மானிய, சிறுவர் தோட்டக்கல்வி முறையின் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு அக்கோட்பாடுகளை இந்தியமயமாக்கிச் செயற்படுத்த வேண்டும் என நிவேதிதை வலியுறுத்தினார்.

ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றிய மழலையர் தோட்டக் கல்விமுறை பல சிறப்புக்களும், நன்மைகளும் உடையது என ஏற்றுக் கொண்டாலும் அதை இந்திய மயமாக்க வேண்டிய தேவையை நிவேதிதை உணர்ந்திருந்தார். கல்வி அளிப்பதற்கான மேலைநாட்டு அணுகுமுறைக்கும், இந்திய அணுகுமுறைக்கும் இடையே உள்ள அடிப்படைவேறுபாட்டை மிகத்தெளிவாக விளக்குகிறார் நிவேதிதை. குழந்தைக் கல்வி பற்றிய மேலை நாட்டுச் சிந்தனையாளர்களாகிய பெஸ்டலோஸி ஃப்ரோபெல் மற்றும் கூக் முதலியோர் 'உலகைப் பற்றிய பொது அறிவே மனிதனை மனிதனாக்குகிறது' என நம்பினர். ஆகவே அவர்கள் குழந்தைகள் விளையாடுவதை உற்றுநோக்கி, அவர்கள் விளையாட்டுக்களிலிருந்து கிரகித்த உண்மைகளைக் கொண்டு தம் கோட்பாடுகளை உருவாக்கினர். அக்கோட்பாடுகளில் அளிக்கப்படும் கல்வியின் மூலம் பெறும் அறிவு குழந்தைகள் புற உலகு பற்றி அறிந்து, புற உலகை ஆட்கொள்ளும் திறமை பெறுவர் என நம்பினர். ஆனால் கீழ்த்திசை நாடுகளில் குழந்தைகளின் அகவளர்ச்சி குறிக்கோளாக இருந்தது. ஆகவே இந்தியக் குழந்தைகளுக்கான கல்விக்கூடங்கள், ஐரோப்பியச்

சிறுவர்களுக்கான கல்விக்கூடங்களில் இருந்து வேறுபட்டிருத்தல் வேண்டும். ஃப்ரோபெல் முதலியோர் வகுத்த திட்டங்களில் நல்லவற்றையும், தேவையானவற்றையும் ஏற்றுக் கொண்டு அவை கல்வியாளர்களால், இந்தியக் குழந்தைகளுக்கு ஏற்ற கல்வித் திட்டங்களாக மாற்றங்களுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

ஃப்ரோபெல்லின் கல்வித்திட்டம் மிகுந்த செலவு பிடிப்பதோடன்றி, கல்விச் சாதனங்களின் உற்பத்தி வணிகமயப்படுத்தப்பட்டு வணிகர்களின் சுரண்டலுக்கு ஆட்பட்டுவிட்டதெனக் கூறும் நிவேதிதை எப்படி இக்கல்வி முறையைக் குறைந்த செலவில் மேற்கொள்ள முடியும் எனவும் விளக்குகிறார். ஃப்ரோபெல் அளிக்கும் முதல் அன்பளிப்பாகிய மென்மையான வண்ணப் பந்தை உருவாக்க, சாதாரண நூல்பந்தின் மீது வேண்டிய வண்ணத்தில் பருத்தித் துணியைச் சுற்றினாலே போதும் என்பது நிவேதிதை கூறும் ஆலோசனை. இயந்திரங்களால் உருவாக்கப்பட்டுக் கடைகளில் விற்கப்படும் கல்விச்சாதன விளையாட்டுப் பொருட்களைக் காட்டிலும் இந்தியக் கிராமங்களில் எளிதாக விலையின்றிக் கிடைக்கும் பல பொருட்கள் இந்தியக் குழந்தைகளின் கற்பனையையும், ஆர்வத்தையும், ஆக்கத்திறனையும் வளர்க்கவல்ல பொம்மைகளையும், விளையாட்டுச் சாதனங்களையும் உருவாக்கப் பயன்படுபவை. அதுபோலவே கிண்டர்கார்டன் விளையாட்டுக்களும், பாடல்களும் குழந்தைகளின் சுதேசி மண்ணில் இருந்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகள் விதை விதைத்தல், நாற்று நடுதல், அறுவடை செய்தல், நெசவாளி தறிநெய்தல், பெண் ராட்டை சுற்றல், கொல்லர், குயவர் முதலியோரின் தொழில்களும் இந்திய இயற்கைக் காட்சிகளும், இந்திய வீதிகளிலும், வீடுகளிலும் அன்றாடம் சிறுவர்கள் பார்த்துப் பழகிய காட்சிகளும் மழலைப்பாடல்களின் பாடுபொருளாதல் வேண்டும். கதைகளின் கருப்பொருளாதல் வேண்டும் என அறிவுறுத்தும் நிவேதிதை, திருமதி பிரேண்டர் என்பார் தமிழில் தோன்றிய மழலையர் பாடல்களைத் தொகுத்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் விளையாட்டுக்களை உருவாக்கியதையும் சுட்டிக் காட்டுகிறார்.

**கல்வி கற்பிக்கும் நெறிமுறைகள் :** கல்வி கற்பிக்கும் முறை என்ற தனது கட்டுரை ஒன்றில் கல்வி கற்பித்தல் பற்றிய சில நெறிமுறைகளைக் குறிப்பிடுகிறார் நிவேதிதை. கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோர் மூன்று வினாக்களுக்கு விடை தெரிந்திருக்க வேண்டும் என்பது நிவேதிதையின் கருத்து.

கல்வி என்றால் என்ன? கல்வியின் இலட்சியங்கள் யாவை? உண்மையான, கல்வியளிப்போரை எங்கு காணலாம்? என்ற இம்மூன்று வினாக்கள் கல்விப்பணியில் ஈடுபட்டோர் எழுப்பி, விடை காணவேண்டிய தையல்கலை, சமையல் கலை முதலியவற்றை நாம் பயிற்சி மூலம் தெரிந்து கொள்வதோ ஒரு குறிப்பிட்ட செயல் திறனைப் பெறுவதோ முழுமையான கல்வி

ஆகாது. செயல் திறன் பயிற்சியும் இன்றியமையாததே, ஆனால் தொழில் அறிவு கல்வியின் இன்றியமையாத ஒரு பகுதியே. கல்வி என்பது மனத்துக்குப் பயிற்சி அளிக்கும் முறை. சில தகவல்களை அளிப்பது கல்வியன்று. மனம் விழித்திருக்கவும், கவனச் சிதறல் இன்றி ஒருமுகப்பட்ட நிலையில் இருக்கும் ஆற்றலைப் பெறவும், எந்த விஷயமாயினும் அதைத் தொய்வின்றி அவ்விஷயத்தின் அனைத்துக் கோணங்களையும், அவற்றின் இடையே உள்ள பிணைப்புக்களையும் பற்றி ஆராயும் சக்தியைப் பெறவும், நேரிய நோக்கில், திறம்படச் சிந்திக்கவும், செயற்படவும் தேவையான ஆற்றலைப் பெறவும் அளிக்கப்படும் ஆற்றலைப் பெறவும் அளிக்கப்படும் மனப்பயிற்சியே கல்வி.

அறிவியல் கலை, வரலாறு, தொழில் நுட்ப அறிவாற்றல், வாணிபம் முதலிய பல்வேறுபட்ட விஷய ஞானங்களும் ஒரே முழுமையின் வேறுபட்ட வெளிப்பாடே. இவற்றில் ஏதேனும் ஒன்றின் வழியேகூட, பண்படுத்தப்பட்ட மனம், ஒளி வெள்ளத்தைப் பெறமுடியும். ஆகவே கல்வியின் முதல்நிலை மனத்தைப் பக்குவப்படுத்தலும், பண்படுத்தலும்.

பண்பட்ட மனஉணர்வுகளோடு பெறப்பட்ட எந்த அறிவின் ஆற்றலும் கல்வியின் இறுதி இலட்சியத்தை அதாவது மனித மனச்சுரங்கத்தின் உள்ளார்ந்த தெய்வீகத்தை வெளிப்படச் செய்து, துடிப்படையச் செய்து, செயலாற்றத் தூண்டுவது என்னும் இலட்சியத்தை அடையத் துணை நிற்கும்.

‘எது உண்மைக் கல்வி என்றுணர்ந்து, கல்வியின் இறுதி இலட்சிய நோக்குப் பயணமாகக் கல்விக் காலத்தை ஆக்கவல்ல ஆசிரியர்களின் பண்புநலன்கள் எவ்வாறு அமைதல் வேண்டும்’ என நிவேதிதை கூறுகிறார். ஜெர்மானியச் சமவெளிகளில் அலைந்து, திரிந்து குழந்தைகள் விளையாடும் முறைகளைக் கூர்ந்து, கவனித்து ‘சிறுவர் தோட்டக்கல்வி’ முறையை உருவாக்கிய ஃப்ரோபெல் கண்டறிந்த பேருண்மை – குழந்தைக்குக் கல்வி கற்பித்தலை விட மிக முக்கியம், குழந்தை தானாக ஆராய்ந்து, அறிந்து தனக்குத் தானே கற்பித்துக் கொள்ளும் ஆர்வத்தைக் குழந்தையிடம் தூண்டுவது என்பதாகும். குழந்தை தானாக எதையும் அறிந்து கொள்ள விழையும் இந்த ஆர்வத்தைத் தூண்டவல்ல முறையில் கல்வி கற்பிக்கும் ஆற்றல் ஒரு தாயைப் போல் கண்ணும், கருத்துமாகச் செயல்பட முடிந்த ஒரு ஆசிரியருக்கே – அந்த ஆசிரியர் ஆணாக இருந்தாலும் – சாத்தியம் என்கிறார் நிவேதிதை. ஒரு குழந்தையின் மனத்தையும், இயல்பையும் புரிந்து, அக்குழந்தை இட்டுச் செல்லும் வழியிலேயே சென்று கல்வி கற்பிக்கும் திறமையுடைய தாய்மை உணர்வுடைய ஆசிரியரே சிறந்த ஆசிரியர் என்பது நிவேதிதையின் நம்பிக்கை. இத்தகைய சிறந்த ஆசிரியர், குழந்தை வழியிலேயே சென்று குழந்தைக்குக் கல்வி புகட்ட முயலும் அதேநேரம் கல்வியின் இறுதி இலட்சியம் குறித்த விழிப்புணர்வோடு எப்பொழுதும் பணியாற்ற வேண்டும் என்கிறார் நிவேதிதை.



# அலையும் துறவி

## ஆர்.சி. தாணு



மாக்ஸ்முல்லர்

ஆத்திரம் அனைத்தையும்
அடக்கிக் கொண்டது!
ஆக்ரோஷக் காளை
அகிம்சையாகி
அப்படியே திரும்பியது.
மிஸ் மார்கரெட் நோபிள்
என்றுமே சுவாமிஜியின்
சொற்பொழிவுகளை
மிஸ் பண்ண மாட்டாள்.
ரசிகையாக இருந்தவர்
சிஷ்யையாக மாறினார்.
பெயருக்கு, பேச்சினைக்
கேட்க வந்தவர்
பெயரினையே
நிரந்தரமாய் மாற்றினார் சுவாமிஜி.
சமுதாயப் பணிகளை
சரளமாய் செய்தார்.
28.05.1896
மாட்சிமை பொருந்திய
மாண்பினர் மாக்ஸ்முல்லர்.
வங்கத்தின் வனப்பும்
பேராசிரியப் பெருமகனும்
பலமணிநேரம்
கலந்துரையாடலில் . . . .
கல்லூரிகள் பல
காண்பித்தார்.
பள்ளிகள் பல
பரிந்துரைத்தார்.
நூல் நிலையங்களை
நகரச் செய்தார்.
ரயில் நிலையம் வந்து
வழி அனுப்பி வைத்தார்.

இந்தியத் திருநாட்டை
இனி இனிது காண்பது
எப்போது?
‘‘இந்தியா வந்தால்
சத்தியமாய் நான் எந்நாடு
திரும்ப மாட்டேன்.’’
‘‘இறப்பும் இனி ஒரு
பிறப்பும் இந்தியாவில் மட்டுமே’’
கருத்துக்களை கேட்டவர்
சற்றே கண்ணயர்ந்தார்.
உரைகளை கேட்டவர்
சற்றே உணர்விழந்து போனார்.
நடப்பது நிஜமா? இவ்வுலகில்
இந்தியப் புகழை
இனிது மெச்சினார்.
இயக்கப் பணிகளை
இன்முகமாய் செய்ய
இங்கிலாந்தில்
சுவாமி அபேதானந்தர்.
வேதாந்தப் பணிகளை
வெற்றிகரமாய் முடிக்க
அமெரிக்காவில்
சுவாமி சாரதானந்தர்.
விவேகானந்த விருட்சத்தில்
விளைந்த வித்தியாச
விதைகள் இவர்கள்.
லட்சியப் பணி லண்டனில்...!
ஆன்மீகப் பணி
அமெரிக்காவில். . .!
அங்குமிங்கும் அலைந்து
அரும்பணி ஆற்றினார்,
அண்ணல்.

# சுவாமி விவேகானந்தர், விஞ்ஞானம் – ஆன்மீகம்

## டாக்டர் ஆர். சிதம்பரம்

**பாரத அரசின் முதன்மை விஞ்ஞான ஆலோசகர், முன்னாள் தலைவர், பாரத அணுசக்தி ஆணையம், இன்னாள் துணைத்தலைவர் உலக அணுசக்தி ஆணையம்**

**(கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் மதுரையில் ஏற்பாடு செய்திருந்த தமிழ் நாடளாவிய வெல்க வெல்கவே!! இளைஞர் முகாமின் நிறைவு விழாவில் 26.01.2011 அன்று ஆற்றிய நிறைவுப் பேருரையின் தமிழாக்கம்)**

ஒரு விஷயத்தைக் கவனித்தால் சுவாரசியமாக இருக்கிறது. உயிரற்ற பொருள்களில் அணுக்களிடையே ஏற்படும் பிரதிவினைகளும் தொலைதூர கேலக்ஸிகளில் நடக்கும் பிரதிவினைகளும், நமக்கு உள்ளேயே நடக்கும் பிரதிவினைகளும் ஒரே விதிகட்கு உட்பட்டே நடக்கின்றன. இதுதான் பரப்பிரம்மம் என்ற கருத்துருவுக்கு ஆதாரமோ?

சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். வேதாந்தசாரம் என்னவென்றால் இருப்பது ஒரே ஒரு உயிர்தான். ஒவ்வொரு ஆன்மாவும் முழுமையாக அந்த உயிரே தான். அந்த உயிரினப் பகுதிகள் அல்ல!

சுவாமி விவேகானந்தர் சுவாரசியமான ஒரு செய்தியைச் சற்று நகைச்சுவையுடன் கூறியிருக்கிறார். ‘‘ஜோதிடம் முதலிய இறைரகசிய சமாச்சாரங்கள் பொதுவாக மனத்தின் பலவீனத்தையே குறிப்பவை. அவை நம் மனத்தில் பெரிய இடத்தைப் பிடித்துக் கொள்ள முற்படாமல் நாம் ஒரு மருத்துவரைப் போய்க் கலந்தாலோசிக்க வேண்டும். நன்றாகச் சாப்பிட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.’’

இறுதிக்கணக்கில், மதங்களிடையே இருக்கும் வேறுபாடுகள் அற்பமானவை என்று கருதுகிறார் சுவாமிஜி. வெவ்வேறு மதங்களை ஆராய்ந்து படித்தால் அவற்றின் அடிப்படை சாரம் ஒன்றே தான் என்று நாம் அறிந்து கொள்வோம் என்கிறார்.

11.09.1893-ல் சிக்காகோ சர்வமத மாநாட்டில் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டபின் நியூயார்க் ஹெரால்ட் பத்திரிக்கை இவ்வாறு

எழுதிற்று. ‘‘சந்தேகத்துக்கு இடம்இன்றி சர்வமதமாநாட்டில் மிகப்பெரிய நபர் சுவாமி விவேகானந்தர்தான். அவர் பேச்சைக் கேட்டபின், இந்த ஞான தேசத்துக்கு மிஷனரிகளை அனுப்புவது எவ்வளவு முட்டாள்தனம் என்று நாம் உணருகிறோம்.’’

கூடிய சீக்கிரமே பாரதம் ஒரு ‘‘வளர்ந்த’’ நாடு ஆகும். அதேசமயத்தில் நாம் நம் மகத்தான, பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் ஆ ன் மீ க ப் பாரம்பரியத்தையும் தக்க வைத்துக் கொள்வோமானால் பாரதம் ஒரு மகத்தான தேசமாகவும் ஆகிவிடும்.

என் இளைய நண்பர்களே! உலகத்திற்குக் கொடுக்க பாரதத்திடம் ஒரு மகத்தான பண்பாட்டுச் செய்தி உள்ளது. ஒரு மகத்தான ஆன்மீகச் செய்தி உள்ளது. அதை எடுத்துச் சொல்லவே சுவாமி விவேகானந்தர் ஒரு நூற்றாண்டுக்கு முன் முயன்றார். இதை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். பலமான, சுதந்திரமான செக்குலர், ஜனநாயக பாரதத்தில் இருந்து, வளர்ந்த பாரதத்தில் இருந்து இப்பணியை நாம் செய்ய வேண்டும்.



பாரதம் ஒரு வளர்ந்த தேசம் ஆக வேண்டும் என்றால் அந்த அந்தஸ்தைப் பிடித்து வைத்துக் கொண்டு விட்டுவிடாமல் இருக்க வேண்டும் என்றால், நம் தேசம் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்றால் மட்டும் போதாது. விஞ்ஞான முன்னேற்றமும் வேண்டும். ராணுவ பலமும் வேண்டும். உங்கள் முன்னால் இருக்கும் சவால் என்னவென்றால், விஞ்ஞானத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பயன்படுத்தி, பாரதத்தை முன்னேற்றுவது எப்படி என்பதே தேசீய செல்வத்தை உருவாக்க வேண்டும். நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். குறிப்பாக, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். தேசப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். அதேசமயம் நம் ஆன்மீக மரபையும், பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் காத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய எதிர்கால பாரதத்தில் இருந்து அடுத்த சுவாமி விவேகானந்தர் மேலெழுந்து வரும்போது, அவருடைய உபதேசம் உலகினூடே இன்னும் வேகமாகப் பரவும்.

**(நிறைவு)**

# விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரி
# கிராம முன்னேற்றத் திட்டம் - தூத்துக்குடி

**பள்ளி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற ஆசிரிய, ஆசிரியைகளுக்கான விபரப் பட்டியல் 2011 - 12**

## தலைப்பு: ''அறத்தையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதில் தமிழ் முனிவர்களின் - பங்கு''

**முதல் பரிசு: செல்வி/திருமதி. டி. ஞானசெலின்,** பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி, அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம்

**இரண்டாம் பரிசு: செல்வி/திருமதி. அ. மணிமேகலை,** அரசு மேல்நிலைப்பள்ளி, உமரிக்காடு - 628 151

**மூன்றாம் பரிசு: செல்வி/திருமதி. சு. சுப்புலெட்சுமி,** திரு. இராமையா, பாகவதர் நினைவு நிலை செந்தில் முருகன் நடுநிலைப்பள்ளி, திருச்செந்தூர்.

**நான்காம் பரிசு: செல்வி/திருமதி. அ. இராதா,** அன்ன விநாயகர் தேவஸ்தானம் மேல்நிலைப்பள்ளி, கணபதிபுரம் அஞ்சல் - 629 502

**ஐந்தாம் பரிசு:** லோ. காந்திமதி, விவேகானந்தா வித்யா பவன் மெட்ரிக் பள்ளி, எளையாம் பாளையம், திருச்செங்கோடு - 637 205

**ஆறுதல் பரிசுகள்: 1) செல்வி/திருமதி. சு. சுஜாதா,** ஸ்ரீசாய் மெட்ரிக்குலேசன் பள்ளி, திருப்பூர் -5, **2) செல்வி/திருமதி. ச. ரேவதி,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தேவர்குளம் - 627 951, திருநெல்வேலி மாவட்டம், **3) செல்வி/திருமதி. பா. வசந்தா,** ஸ்ரீதேவி மகளிர் மேல்நிலைப்பள்ளி, கொல்லங்கோடு, **4) செல்வி/திருமதி. ரா. ரம்யா,** ஸ்ரீசாய் மெட்ரிக்குலேசன் பள்ளி, திருப்பூர் -5, **5) செல்வி/திருமதி. வி. ஷீலா தேவி,** ஸ்ரீசாய் மெட்ரிக்குலேசன் பள்ளி, திருப்பூர் -5, **6) செல்வி/திருமதி. அம்புஜம்,** ஸ்ரீராவ்பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **7) செல்வி/திருமதி. க. பொற்கொடி,** நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **8) செல்வி/திருமதி. சு. பத்மாவதி,** விவேகானந்தா வித்யா பவன் மெட்ரிக் பள்ளி, எளையாம் பாளையம், திருச்செங்கோடு 637 205, **9) செல்வி/திருமதி. ஆ. கோமா,** சண்முக சுந்தர நாடார் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர் - 628 151, தூத்துக்குடி மாவட்டம், **10) செல்வி/திருமதி. எம். சிவானந்த வடிவு,** மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **11) செல்வி/திருமதி. த. குருதாமரைச் செல்வி,** நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **12) செல்வி/ திருமதி. எம். பொன்னம்மாள்,** வி.கே.எம்.ஹெச்.எஸ். ஸ்கூல், விவேகானந்தா

நகர், ஏர்வாடி ரோடு, வள்ளியூர் - 627 147, **13) செல்வி/திருமதி. மு. இராஜ சுலோசனா,** ஸ்ரீ ராவ் பகதூர் எ.கா.த.தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **14) செல்வி/திருமதி. இரா. சிவசங்கரி,** எம்.ஜி. பப்ளிக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ராமநாதபுரம், **15) செல்வி/திருமதி. ஏ. குளோரி,** ஸ்ரீ ரெங்கநாயகர், ஆரம்பப்பள்ளி, இராஜபாளையம் - 626 145, விருதுநகர் மாவட்டம் **16) செல்வி/திருமதி. க. சுபா,** திருராமையா பாகவதர் நினைவு நிலை செந்தில் முருகன்பள்ளி, திருச்செந்தூர், **17) செல்வி/திருமதி. ச. மகாலட்சுமி,** ஸ்ரீ ரெங்கநாயகர் ஆரம்பப்பள்ளி, கோவிலூர் தேவதானம், இராஜபாளையம், விருதுநகர், **18) செல்வி/திருமதி. ஏ. உமா முருகன்,** சாரதா மெட்ரிக் பள்ளி, சங்கர் நகர் - 627 357, **19) செல்வி/திருமதி. ஹேமா,** அன்ன விநாயகர், தேவஸ்தானம் மேல்நிலைப்பள்ளி, கணபதிபுரம் அஞ்சல் - 629 502, கன்னியாகுமரி மாவட்டம், **20) செல்வி/திருமதி. இரா. வாணிஸ்ரீ,** நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **21) செல்வி/திருமதி. தி. யோக நந்தினி,** ஸ்ரீசாய் மெட்ரிக்குலேசன் பள்ளி, 65/41, ராம் நகர் 4-வது தெரு, திருப்பூர் - 5, **22) செல்வி/திருமதி. எஸ். சரோஜினி,** தலைமை ஆசிரியை, செங்குந்தர் துவக்கப்பள்ளி, அம்பாசமுத்திரம் - 627 401, திருநெல்வேலி, **23) செல்வி/திருமதி. கார்த்திகை செல்வி,** உதவி ஆசிரியை, ச.வெ.அ. நடுநிலைப்பள்ளி, விருதுநகர் மாவட்டம், **24) செல்வி/திருமதி. இரா. சுப்புலெட்சுமி,** ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **25) செல்வி/திருமதி. ந. வெங்கடேஸ்வரி,** நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **26) செல்வி/திருமதி. ரா. லெட்சுமி,** ச.வெ.அ. நடுநிலைப்பள்ளி, விருதுநகர் மாவட்டம், **27) செல்வி/திருமதி. க. அருள் சுந்தரி,** ஸ்ரீ ரெங்கநாயகர் ஆரம்பப்பள்ளி, முகவூர் - 626 111, விருதுநகர் மாவட்டம், **28) செல்வி/திருமதி. ஆ. விநாயக சுந்தரி,** தலைமை ஆசிரியை, சங்கரக்குமார் தொடக்கப்பள்ளி, கோவில்பட்டி, **29) செல்வி/திருமதி. இரா. இராஜேஸ்வரி,** உதவி ஆசிரியை ச.வெ.அ. நடுநிலைப்பள்ளி, விருதுநகர் மாவட்டம், **30) திரு. வ. சிவகுமார்,** எம்.ஜி. பப்ளிக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ராமநாதபுரம் - 623 504, **31) செல்வி/திருமதி. து. பிரேமா,** நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், **32) செல்வி/திருமதி. த. லதா,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கோவில்பட்டி, மல்லாங்கிணர் - 629 109, காரியப்பட்டி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம், **33) செல்வி/திருமதி. பு. வீரச்செல்வி அருணாசலம்,** ஸ்ரீரெங்கநாயகர் ஆரம்பப்பள்ளி, கோவிலூர் - 626 111, விருதுநகர் மாவட்டம், **34) செல்வி/திருமதி. அ. செல்வராணி,** ஆசிரியை, பாரதி பாலர் தொடக்கப்பள்ளி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம், **35) செல்வி/திருமதி. கு. விஜயலட்சுமி,** ச.வெ.அ. நடுநிலைப்பள்ளி, விருதுநகர் மாவட்டம், **36) செல்வி/திருமதி. ஹி. குண சுந்தரி,** ஸ்ரீசரவணய்யர் நடுநிலைப்பள்ளி, திருச்செந்தூர்.

# விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரி
# கிராம முன்னேற்றத் திட்டம் - தூத்துக்குடி

கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற ஆசிரிய, ஆசிரியைகளுக்கான விபரப் பட்டியல் 2011 - 12

## தலைப்பு: ''அறத்தையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதில் தமிழ் முனிவர்களின் - பங்கு''

**முதல் பரிசு: திரு. சி.கே. இரவிசங்கர்,** துறைத்தலைவர், துகலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை, விவேகானந்தா மகளிர் கல்லூரி, திருச்செங்கோடு.

**இரண்டாம் பரிசு: செல்வி/திருமதி. சி. மைதிலி,** துணைப் பேராசிரியை, நாகர்கோவில் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, கோணம், நாகர்கோவில் - 629 004.

**மூன்றாம் பரிசு: செல்வி/திருமதி. ஆர். தெய்வ வீரலெட்சுமி,** கோவிந்தம்மாள் ஆதித்தனார் பெண்கள் கல்லூரி, திருச்செந்தூர்.

**நான்காம் பரிசு: செல்வி/திருமதி. மு. உமா மகேஸ்வரி,** விவேகானந்தா கல்வியியல் கல்லூரி, கும்மங்குடி, சிவகங்கை மாவட்டம்.

**ஆறுதல் பரிசுகள்: 1) செல்வி/திருமதி. ச. முத்துலெட்சுமி,** ஸ்ரீ காளிஸ்வரி கல்லூரி, ஏ. மீனாட்சிபுரம், சிவகாசி - 626 130, **2) திரு. அ. இராஜி,** விவேகானந்த மகளிர் கல்லூரி, உஞ்சனை கிராமம், திருச்செங்கோடு, **3) திரு. பி. சங்கர நாராயணன்,** கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தேனீ, 272, தாய் காலனி கீழவடகரை பெரியகுளம் - 626 601, தேனீ மாவட்டம், **4) செல்வி/திருமதி. நா. உத்திரக்குமாரி,** அருள்மிகு பன்னிருபடி அய்யன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாங்குநேரி, திருநெல்வேலி , **5) திரு. அ. சுந்தரபாண்டியன்,** விவேகானந்த மகளிர் கல்லூரி, உஞ்சனை கிராமம், திருச்செங்கோடு, **6) செல்வி/திருமதி. எம். பொன்னியின் செல்வி,** வன்னிய பெருமாள் மகளிர் கல்லூரி, விருதுநகர் - 628 001, **7) செல்வி/திருமதி. ஆர். அம்பிகேஸ்வரி,** ஸ்ரீ சந்திரபிரபு ஜெயின் கல்லூரி, மிஞ்சூர் - 601 203, **8) செல்வி/திருமதி. வே. கீதப்பிரியா,** ஸ்ரீ சந்திரபிரபு ஜெயின் கல்லூரி, மிஞ்சூர் - 601 203, **9) செல்வி/திருமதி. பி. சுபத்ரா பாலசந்தர்,** பார்க்ஸ் கல்லூரி, 8/3194 சுபத்ரா நிவாஸ் அண்ணாநகர் பூலுவப்பட்டி, திருப்பூர் - 641 602, **10) செல்வி/திருமதி. பி.பி. மினி,** வி.டி.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருமனை - 629 151, கன்னியாகுமரி மாவட்டம், **11) திரு. உ. கிருஷ்ணன்,** ஸ்ரீ சந்திரபிரபு ஜெயின் கல்லூரி, மீஞ்சூர் - 601 223, **12) செல்வி/திருமதி. வி. வசுமதி,** ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, வெங்கடேஸ்சாமில் அஞ்சல், உடுமலை, **13) செல்வி/திருமதி. அ. வேணிகிருஷ்ணபாரதி,** ஸ்ரீ காளிஸ்வரி கல்லூரி, ஏ. மீனாட்சிபுரம், சிவகாசி - 626 130.

# சுவாமி விவேகானந்தரின் பிறந்த தின விழா கொண்டாட்டங்கள்



**வள்ளியூர் சூரிய நமஸ்காரம் விழா மேடை**




**5000 பேர் சூரிய நமஸ்காரம் வள்ளியூர்**

வள்ளியூர் விவேகானந்த கேந்திர வளாகம் 24.01.12 அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. 23 பள்ளிக்கூடங்களில் இருந்து மாணவர்களும், உள்ளூர் தொண்டர்களும், கேந்திர அன்பர்களுமாக ஐந்தாயிரம் பேர் திரண்டிருந்தனர். பள்ளி மைதானம் கோலங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் பின்புறம் அழகிய மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பள்ளி தாளாளர் ஸ்ரீ எஸ்.கே. சுப்பிரமணியம் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வரவேற்று சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை ஒட்டி உடலும், உள்ளமும் பலம் பெற்று இளைஞர்களை உருவாக்கும் வண்ணம் சுற்று வட்டாரத்தில் உள்ள 23 பள்ளிகளில் இருந்து வந்திருந்த மாணவர்களையும், விழாச் சிறப்பு விருந்தினர் மகேந்திரகிரி விண்வெளி ஆராய்ச்சி மைய முன்னாள் துணை இயக்குனர் இன்னாள் ஆலோசகர் திருமிகு. கணேசன் அவர்களையும் வரவேற்றார். மேடையில் கேந்திரத் தொண்டர் ந. கிருஷ்ணமூர்த்தி, கேந்திர அன்பர் திரு. சங்கர நாராயணன், பள்ளி முதல்வர் திருமதி ஆண்டாள் ஆகியோர் வீற்றிருந்தனர். இறை வணக்கம், திருவிளக்கு ஏற்றுதல், வரவேற்புரை இவற்றைத் தொடர்ந்து கேந்திரத் தொண்டர் சூரிய நமஸ்காரத்தின் பெருமையையும் அதனால் கிடைக்கும் நன்மைகளையும் எடுத்துரைத்து சூரிய நமஸ்காரம் போடுவதால் சுவாமி விவேகானந்தர் கண்ட லட்சிய பாரதத்தை உருவாக்க முடியும் என்று பேசினார். இஸ்ரோ அமைப்பின் ஆலோசகர் திரு. கணேசன் விண்வெளியில் பாரதம் பெற்ற வெற்றிகளை எடுத்துரைத்து விஞ்ஞான மனப்பான்மையுடன் வளருவது சுவாமிஜி கண்ட நவபாரதத்தை உருவாக்கும் என்று பேசினர். அடுத்து மேடையில் பேரிகை முழுங்க ஒரு மாணவனும், ஒரு மாணவியும் சூரிய நமஸ்காரங்களை படிப்படியாகப் போட்டுக் காட்டினர். கேந்திர தமிழக, கேரள அமைப்பாளர் திரு. ஜி. கிருஷ்ணசாமி உற்சாகமூட்ட மாணவ, மாணவிகள் 12

சுற்று சூரிய நமஸ்காரத்தை கட்டுப்பாட்டுடன் போட்டுக் காட்டியது வியப்பூட்டுவதாக அமைந்திருந்தது. மாணவர்களின் திறமையும், ஒழுங்கும், ஆர்வமும் வெயிலைப் பொருட்படுத்தாத மனோதிடமும் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்தது. பள்ளி முதல்வர் திருமதி ஆண்டாளின் நன்றியுரைக்குப் பின் மாணவர்கள் எல்லோருக்கும் கேந்திர காலண்டர், குளிர்பானம் முதலிய பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுகளை விரிவாகச் செய்திருந்த பள்ளி முதல்வர், ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு பள்ளி நிர்வாகத்தினர், சிறப்பாக செய்த மாணவச் செல்வங்கள் அனைவரையும் எல்லோரும் பாராட்டிக் கொண்டே சென்றனர். இதேபோன்ற இன்னொரு விழா 28.01.12 அன்று நாகர்கோவில் தென்திருவிதாங்கூர் ஹிந்து கல்லூரியில் நடைபெற்றது. தாளாளர் திரு. பி. ஆறுமுகம்பிள்ளை திருவிளக்கு ஏற்றி துவங்கி வைத்தார். கேந்திரப் பள்ளி மாணவிகளின் பிரார்த்தனை நடைபெற்றது. கேந்திரப் பள்ளி முதல்வர் திரு. எஸ். ஆபிரகாம் லிங்கம் சூரிய நமஸ்காரத்தின் பெருமையையும், சுவாமிஜியின் வாழ்வில் அதைப் பயிலுவதன் பொருத்தத்தையும் எடுத்துரைத்து வரவேற்புரை நடத்தினார். கேந்திரப் பொருளாளர் எம். ஹனுமந்தராவ் சூரிய நமஸ்காரத்தின் பெருமையை எடுத்துரைத்து தலைமையுரை ஆற்றினார்.

நாகர்கோவில் நகர்மன்றத் தலைவி திருமதி எம். மீனா தேவி சிறப்புரை ஆற்றி மாணவச் செல்வங்களையும், பங்கேற்ற பள்ளிகளையும், ஏற்பாடு செய்தவர்களையும் பாராட்டி வாழ்த்தினார். மந்திரங்களுடன் 12 சூரிய நமஸ்காரங்கள் மாணவ, மாணவிகளால் போடப்பட்டன. ஒவ்வொரு பள்ளிக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. அமிர்த வித்யாலய முதல்வரும் விழா ஏற்பாட்டுக்கு உதவிய சிறப்பு உறுப்பினருமாகிய திரு. எஸ். ராஜசேகர் நன்றி கூறினார். தேசீய கீதத்துடன் விழா முடிந்தது. வந்த அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது விழாவின் முக்கிய அம்சம் ஆகும்.



**சூரிய நமஸ்காரம் வெகு ஜோர்**

**(நாகர்கோவில்)**



**நாகர்கோவிலில் பள்ளி முதல்வருக்கு நினைவுப் பரிசு வழங்குகிறர் பொதுச் செயலாளர் ஸ்ரீ பானுதாஸ்**

# சுந்தரர்

## என்.எஸ்.பி

சடையனார்க்கும் இசை ஞானியார்க்கும் பிறந்தவர் சுந்தரர். பிள்ளைத் திருநாமம் நம்பி ஆரூரர். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ அந்தண குலம். சிற்றரசராகிய நரசிங்க முனையரின் வளர்ப்பு மகனாகவும் திகழ்ந்தார். அடிமை என ஓலைகாட்டித் திருமணத்தின்போது இறைவன் தடுத்தாட்கொண்ட செய்தி பிரசித்தம். வன்றெண்டர், தம்பிரான்தோழர் என்னும் பெயர்களும் பெற்றார். பெரிய புராணத்தின் காவியத் தலைவராகவும் போற்றப்படுகின்றார்.

சுந்தரர் பதிகங்கள் ஏழாம் திருமுறையாக விளங்குகின்றன. பாடியவை 38,000 பதிகங்கள் என்பர்; கிடைக்கப் பெற்றவை 100 பதிகங்களே. இவை திருப்பாட்டு எனவும் வழங்கப்பெறும். சகமார்க்கம் என்னும் தோழமை நெறி நின்றவர் என்றும், யோக நெறி முயன்றவர் என்றும் சைவமரபு சுட்டும்.

அனுபவமே இலக்கியங்களின் பாடுபெருள். சுந்தரர்க்குப் பாடுபொருள் இறை அனுபவம். அவர்க்கு இறைவன் என்பது வாழ்வியலின் அடிப்படை சத்யம். அது சிவம். அச்சிவத்தோடு உறவாடும் அனுபவமே அவர் பாடல்களின் மையம்.

''இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு'' என்பது அவர் வாக்கு. இம்மையத்தைச் சுற்றியே அவரது அனைத்துப் பாடல்களும் சுழல்கின்றன இச்சுழற்சியில் மூவகை நீரோட்டங்களைக் கண்டுணரலாம். அவையாவன 1) இன்ப நாட்டம், 2) துன்ப நீக்கம், 3) ஞான மலர்ச்சி.

**1) இன்ப நாட்டம்:** உலகியல் இன்பங்களை நாடும் நீர்மையைச் சுந்தரர் பாடல்களில் தெளிவாகவே காணமுடியும். பொன்னும் பொருளும் போகமும் வேண்டாது, அன்பும் அருளும் அறனும் வேண்டுவதே பக்தி உலகின் பொதுமைப் போக்கு. ஆனால் சுந்தரர் இம்மையும் மறுமையும் இணைத்தே காண்கின்றார். ''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை, போகமும் திருவும் புணர்ப்பானை'' என்று பாடுகின்றார்.

''பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருளல் வேண்டும்
கறிவிரவு நெய்ச் சோறு முப்போதும் வேண்டும்'' என்று விண்ணப்பிக்க அவர் தயங்கவில்லை. பரவையை விரும்பும் போதும், சங்கிலியை நாடும் போதும்; பொன்னும் நெல்மணியும் பெறுதலைக் கருதியபோதும் - அவர் இறையருளின் உதவியையே வேண்டுகின்றார். வாழ்வியல் இன்பநாட்டம் அவரது பதிக நீர்மைகளில் ஒன்று.

**2) துன்ப நீக்கம்:** வாழ்க்கைத் துயரங்களினின்று விடுபடவும் அவரது சிந்தாநதி இறைவனையே கருதுகின்றது. பரவை-சங்கிலி பிணக்கால் மனம் வருந்தியபோதும், கண்பார்வை இழந்து துயருற்ற போதும், புகர் நோயுற்றுக்

கலங்கிய போதும் இறைவனை வழிபட்டுத் துயர்களையும் போக்கினை அவரிடம் காண்கின்றோம். ''தொழுவாரவர் துயர் தீர்த்தல் உன் தொழிலே'' எனப்பாடுகிறார். நேயம் மிக்க நெருக்கமும், உரிமையின் உச்சத்தில் ஊறும் எழில்பிணக்கமும் பதிகத்தின் தனித்துடிப்பாக ஒலிப்பதும் உண்டு.

''மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே''

என்னும் உரிமைப் போராட்டக்குரல் இதற்கு ஓர் இனிய சான்று. ஓலையால் இறைவன் தம்மை அடிமை கொண்ட போது எழுந்த ஆத்திரம் தொடக்கப் பதிகத்திலேயே 'ஆளாயினி அல்லேன் எனலாமே!' என நெகிழ்வுத் தேனில் குழைகிறது. 'உன் நிர்பந்தத்தால் பணிந்த பணிவாக்கும் இது!' என்பது போலும் ஒரு தோல்வி இனிமை இங்கு ஆனந்த முகம் காட்டுகிறது. பிரான்ஸிஸ் தாம்ப்ஸன் தமது வானுலக வேட்டை நாய் எனும் கவிதையில் ஓடிக் களைத்த களைப்பில் தோற்ற தோல்வி இனிமையையும் தாண்டும் நுட்பம் இதில் உண்டு.

**3) ஞானமலர்ச்சி:** இது ஆன்ம ஆன்ம உலகின் சாரமாகத் திகழும் நீர்மை. இனித்திடும் கனிகளையும், கசந்திடும் கனிகளையும் மாறிமாறிச் சுவைத்து, மரத்தின் உச்சியிலிருக்கும் பறவையை இலட்சியப்படுத்தி நகர்ந்து தானே அதுவாகமாறும் உபநிடதப் பறவை போல – வாழ்க்கையின் இன்ப–துன்ப நுகர்வுகளிலிருந்து ஞானம் பெற்றுயர்கின்றது சுந்தரப்பறவை. 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்' தோற்றம்; உண்டேல் மரணம் உண்டு துயரம் மனை வாழ்க்கை, 'மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி' 'மாயக் கூரை வாழ்வதோர் வாழ்வு' என்பன போலும் ஞானப் பார்வைகள் சுந்தரர் பாடல்களின் நீர்மை ஆகின்றன. இது நிலையாமை–அனுபவத்தில் கிளர்ந்தெழுந்த ஞானச் சுரப்பு. சுந்தரர் தம் தீர்த்த யாத்திரைகளில் ஆலயத் திருவுருவங்களில் பெறும் மனநெகிழ்வும், தேவாசிரிய மண்டபத்தில் திருத்தொண்டர்கள் நினைவில் பெறும் மனக்கிளர்ச்சியும் இந்த ஞான நீர்மையால் செழுமை பெறுகின்றன; ஞான நீர்மைக்குச் செழுமை தருகின்றன.

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.